DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

27ம் ஆண்டில்...
27 years of publishing
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எதிக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1502 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 17, 2025

# மார்க்கம் நகரில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் கொண்டாடப்பெற்ற 'தமிழ் மரபுத் திங்கள்' விழா

கனடாவில் தற்போது மத்திய அரசாங்கம், மாகாண அரசுகள் சில மற்றும் பல நகர சபைகள் ஆகியன ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதத்தை "தமிழ் மரபுத் திங்கள்" என்னும் அழகிய பெயரில் கொண்டாடி வருகின்றன.
மேற்படி விழாக்கள் நடைபெற ஒவ்வொரு பிரதேசங்களிலும் இயங்கிவரும் தமிழர் அமைப்புக்கள் தங்கள் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றன.

எவ்வாறாயினும், கனடாவில் மாத்திரமல்ல உலகில் முதன் முதலாக மார்க்கம் நகரசபையின் உறுப்பினராக 14 வருடங்களுக்கு முன்னர் பதவி வகித்த லோகன் கணபதி அவர்களின் முயற்சியினால் மார்க்கம் நகர சபை மற்றும் மார்க்கம் நகரசபை உறுப்பினர்கள் ஆகியோர் அளித்த ஆதரவோடு மார்க்கம் நகரசபையினால் ஜனவரி மாதத்தை " தமிழ் மரபுத் திங்கள்" என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. (தொடர்ச்சி 3ம் பக்கம்)



# Remax Ace Realty Inc. Brokerage hosted it's 10th Annual Awards Gala on Saturday, 11th, Jan. 2025, in Scarborough



ஸ்காபுறோவில் கடந்த பத்து வருடங்களாக வெற்றிகரமாக இயங்கி-வரும் **Remax Ace Realty Inc Brokerage** நிறுவனம் தனது பத்தா-வது ஆண்டு விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் வைபவத்தை கடந்த 11-01-2025 அன்று மாலை ஸ்காபுறோவில் நடத்தியது.
ஐந்து பங்காளர்கள் இணைந்து ஆரம்பித்த இந்த நிறுவனம் தொ-டர்ந்து பத்தாண்டுகள் நூற்றுக்கணக்கான வீடு விற்பனை முகவர்களை உள்ளடக்கி விற்பனையில் அவர்கள் சாதனைகளை நிலைநாட்டிவருவதையும் அறியக்கூடியதாக உள்ளது.
அவர்களுள். பல இனங்களைச் சார்ந்தவர்களாகவும் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்றவர்களாகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது. (தொடர்ச்சி 25ம் பக்கம்)

கனடாவிலிருந்து கியூபா சுற்றுலா!
இலங்கையை ஒத்த கால நிலையுள்ள கியுபா தேசத்திற்கு சென்று எமது தாயகச் சூழலை அனுபவியுங்கள். டிசம்பர் மாதம் முதல்வாரத்தில் இங்கிருந்து பயணம்.
January 21 தொடக்கம் ஒரு வார காலம் நீங்கள் கியுபாவில் தங்கியிருக்கலாம். கட்டணம் $1,300 மட்டுமே!
எம்மால் வழங்கப்படும் உணவோடு உடன் ஊராடு மற்றும் உடன் மீன் மற்றும் மரக்கறி வகைகள் பழங்கள் என அனைத்தையும் சுவையாகவும் சுத்தமாகவும் உண்டு மகிழலாம்.
தொடர்புகளுக்கு: Thava - 647-469-9839

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd fl) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
PRIME LEGAL SERVICES
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

Toronto District School Board

# நடுத்தர பிரஞ்சு பாடத் திட்டம் (4ம் வகுப்பு நுழைவு)

விண்ணப்பங்கள் தொடங்கும் திகதி: ஜனவரி 6, 2025
விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: ஜனவரி 31, 2025

தற்போது பிரெஞ்சு பாடத் திட்டத்தில் இல்லாத தரம் 3 மாணவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம்

மேலதிக தகவல்களுக்கும் மற்றும் இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்க, www.tdsb.on.ca/french இணைப்பை பார்வையிடவும்

இந்த தைப் பொங்கலில் உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினரும் மகிழ்ச்சி மற்றும் செழிப்புபொங்கட்டும்.

இனிய தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்.

May the blessings of Thai Pongal
Bring you and your family
Good health and happiness

Happy Thai Pongal!





Member of Parliament | Scarborough North

SHAUN CHEN

4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8

416-321-CHEN (2436)
info@shaunchen.com

ShaunChenMP @shaunchenmp @Shaun_Chen www.shaunchen.com

Ontario

Andrea **Hazell**
Scarborough—Guildwood

**Your Community MPP**

## THE CRISIS IN FAMILY MEDICINE



**19,000 residents of Scarborough—Guildwood can't find a family doctor, and the number continues to grow.**

**Across Ontario, 2.5 million people need a family doctor.**
**Another 3 million Ontarians are at risk of losing their doctor due to retirement.**

**Family medicine is a critical pillar in our healthcare system. It helps us stay healthy and is a pathway to more complex care when we require it. We need an all hands on deck approach to ensure that all Ontarians have access to family medicine.**

**I will continue to push the government to make this a priority.**

Andrea Hazell
**Andrea Hazell, MPP Scarborough—Guildwood**

3785 Kingston Rd Unit B1,
Scarborough, ON M1J 3M4

AHazell.mpp.co@Liberal.ola.org
andreahazell.onmpp.ca

(416) 281-2787

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

## மகா பாதகர்களான மகிந்த, கோட்டா, மைத்திரி, ரணில் ஆகியோருக்கு காட்டாத கடும் எதிர்ப்பை தமிழ் அரசியல்வாதிகள் அநுர குமாரவின் அரசிற்கு காட்டுவது ஏன்?

இந்தியாவின் முன்னணி இடதுசாரி கட்சிகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) இலங்கையில் தமிழர்கள் சமத்துவம் மற்றும் கண்ணியத்துடன் வாழ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்தியா முழுவதும் ஆதரவாளர்கள் நிரம்பியுள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 24ஆவது தமிழ்நாடு மாநில மாநாடு கடந்த வார இறுதியில் (ஜனவரி 3-5) தமிழகத்தின், விழுப்புரத்தில் நடைபெற்றது. மாநாட்டின் ஆறாவது தீர்மானமாக இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களின் அவல நிலை பற்றி பேசுகிறது மேலும் அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டுமென இலங்கை அரசை கோருகிறது.

இதே இந்திய கம்யுனிஸ்ட் கட்சிதான் அநுர குமார அவர்கள் உலகமே ஆச்சரியப்படும் வகையில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட வேளை, தனது வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தது. மேற்படி வாழ்த்துச் செய்தியில் "இலங்கை வரலாற்றில் முதன்முறையாக ஒரு இடதுசாரி வேட்பாளர் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றது ஒரு வரலாற்று நிகழ்வு" என அந்தக் கட்சி வாழ்த்தியிருந்தது. இந்தச் செய்தி இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டிருந்த இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது என்றால் அது மிகையானது அல்ல.

இந்தியாவின் பிரதமர் மோடி அவர்கள் அநுர குமாரவை இந்தியாவிற்கு அழைத்து அரச கௌரவத்தை வழங்கி தோளில் தட்டிக் கொடுத்து பாராட்டி வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொண்டு சிரித்த முகத்தோடு வழி அனுப்பி வைத்தார். ஜனாதிபதி அநுர குமாரவை இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் கௌரவித்தார் பிரதமர் மோடி அவர்கள். ஆனால் அவர் இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர் என்பது இந்தியப் பிரதமர் அவர்களுக்கு இஸ்டமில்லாத ஒன்று.

ஆனால் தங்கள் நாட்டு பாராளுமன்றத்தை இடதுசாரிக் கருத்துக்களில் நம்பிக்கை கொண்டவர்கள் அலங்கரிக்கின்றார்கள் என்றும் ஜனாதிபதியின் ஆசனத்தில் அவ்வாறான கருத்துக்களில் நம்பிக்கை கொண்ட ஒரு இளம் அரசியல் தலைவர் அலங்கரிக்கின்றார் என்றும் தென்னிலங்கை மக்களில் பெரும்பாலானவர்கள் உற்சாகத்தோடு நாட்கள் நகர்ந்து செல்வதைக் கவனிக்கின்றார்கள்.

இதேவேளை, எமது தமிழர்பகுதிகளில் மூத்த அரசியல்வாதிகள் தவிர்ந்த "பின்னால்" வந்தவர்களில் பலர் அநுர குமாரவின் தலைமையில் வடக்கிலும் கிழக்கிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சில தமிழர்களின் பிரதிநிதிகளாக காட்சியளிப்பதை விரும்பாதவர்களாக விமர்சனங்கள் அள்ளி எறிகின்றார்கள்.

இந்த விடயம் புதியது அல்ல. இலங்கையில் இடதுசாரிச் சிந்தனைகளை தங்கள் கைகளில் எடுத்து சில கட்சிகள் தங்கள் அரசியல் தளங்களில் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இலங்கைக் கொம்யுனிஸ்ட் கட்சி (மொஸ்கோ அணி) இலங்கைக் கொம்யுனிஸ்ட் கட்சி (பீக்கிங் அணி) இலங்கை சம சமாஜக் கட்சி ஆகியவை இந்தக் கட்சிகளில் முக்கியமானவை. இந்தக் கட்சிகளுக்கு இலங்கையில் நீண்ட கால வரலாறும் அரசியல் பாதைகளும் இருந்தன. தென்னிலங்கையைப் போன்று வடக்கிலும் கிழக்கிலும் கணிசமான அங்கத்தவர்கள் இந்தக் கட்சிகளில் இணைந்து அரசியல் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் மக்கள் அங்கீகாரத்தை அவர்களால் பெற்றுவிட முடியவில்லை. காரணம் தென்னிலங்கையில் முதலாளித்துவ கட்சிகளில் தொங்கிக் கொண்டிருந்தவர்களும் அவர்களின் தலைவர்களும் இடதுசாரிக் கட்சியில் வடக்கிலும் கிழக்கிலும் கால ஊன்றி விடக்கூடாது என்பதற்காக விசமத்தனமாக பிரச்சாரங்களை மேற்கொண்டார்கள்.இடதுசாரி சிந்தனைகளைப் பின்பற்றுபவர்களாக மக்கள் மாறிவிட்டால் இலங்கையில் இனவாதம் என்பது அற்றுப் போய்விடும். தமிழ் சிங்கள மக்கள் அந்த சித்தாங்களின் பின்னாள் இணைந்து ஒன்றுமையாக வாழ்ந்தால் தென்னிலங்கையில் இனவாதத்தை பாவித்து அரசியல் செய்யும் தந்திரம் வேலை செய்யாது என்பதற்காக தென்னிலங்கைக் கட்சிகளின் தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள் பலரை தங்கள் "கைகளுக்குள்" போட்டுக் கொண்டார்கள். இதனால் இடதுசாரிக் கருத்துக்களை வட இலங்கையில் பரப்பி அதனை மக்கள் மத்தியில் வேர் ஊன்ற வைக்க முயன்ற பல தமிழ் பேசும் இடதுசாரித் தலைவர்கள் அரசியலின் முன்வரிகைக்கு வரமுடியாமல் போய்விட்டது. இவ்வாறான பல முக்கிய தகவல்கள் இந்த இடதுசாரி அரசியலுக்குப் பின்னால் மறைந்து போயின. எவ்வுர்றஅன்றைய அமிர்தலிங்கம், செல்வநாயகம் காலத்தில் வடக்கில் இடதுசாரி அரசியல்வாதிகள் வளர்வதற்கு வாய்ப்புக்கள் இல்லாமல் போன்ற ஒரு நிலை மீண்டும் வரக் கூடாது என்பதில் இலங்கையில் இன்று மேற்படி சிந்தாத்தங்களை நேசிக்கின்றவர்கள் எண்ணுகின்றார்கள்.

அநுரகுமாரவும் அவர்களது கட்சியும் வடக்கில் மூன்று ஆசனங்களை தட்டிக் கொண்டார்கள். சரி அந்த மூவருக்கும் சந்தர்ப்பங்களை வழங்கிப் பார்ப்போம் என்ற ஜனநாயக பண்பை நாம் பிரயோகித்தால் தென்னிலங்கையின் தலைமையோடு இணைந்து அவர்கள் தமிழர்களுக்கு நன்மையான விடயங்கள் இடம் பெற வழிசெய்வார்கள் என்ற நம்பிக்கையோடு இருப்பதும் தேர்தலில் தோற்றுப் போனவர்களின் பிதற்றல்களைக் கேட்டு மீண்டும் மீண்டும் குழப்பமடையாத ஒரு நிலை எம் மண்ணில் தோன்ற வேண்டும் என்பதையே நாம் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்!.




## மார்க்கம் மாநகரசபை வளாகத்தில் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் கொண்டாடப்பெற்ற "தமிழ் மரபுத் திங்கள்" விழா

(முன் பக்கத் தொடர்ச்சி)

அதன் தொடர்ச்சியாக கடந்த 12-01-2025 , அன்று ஞாயிற்றுக்கிழமை மார்க்கம் மாநகரசபை வளாகத்தில் அமைந்துள்ள மார்க்கம் தியேட்டர் மண்டபத்தில் தற்போதைய மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் ஏற்பாட்டில் கொண்டாடப்பெற்ற "தமிழ் மரபுத் திங்கள்" விழா வழமைபோல "களைகட்டியது" என்றால் அது மிகையாகாது.

மாகாண சபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் தனது தலைமை உரையில் தமிழ் மரபுத் திங்கள் எவ்வாறு தோற்றம் பெற்றது என்பதை தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கமாகத் தெரிவித்தார்.

தொடர்ச்சியாக இடம்பெற்ற கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை மகிழ்வித்தன. சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட ஒன்றாரியோ மாகாணத்தின் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கியுபா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் சார்பாக ரொறன்ரோவில் உதவித் தூதுவர்களாகப் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சிறப்புப் பேச்சாளர்கள் என மேடையில் இயல் இசை நாடகம் என முத்தமிழும் இடையில் ஆங்கிலத்திலான உரைகள் ஆகியனவும் இடம்பெற்றன.


கனடா உதயன் பத்திரிகையின் சார்பில் அதன் பிரதம ஆசிரியரும் அங்கு கலந்து கொண்டார்.



## வீடு விற்பனைக்கு

சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகா்மையில் கொழும்புத்துறை வீதி-பாண்டியன்தாழ்வில். 2 பரப்புக் காணயில் கடையுடன் சேர்த்து கட்டப்பெற்ற 3 அறைகள் கொண்ட அழகிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: **437 441 5699**
அல்லது மின்னஞ்சல் saitheva09@gmail.com


Sunday
26th
January
2025
5PM
செந்தில் குமரனின் நிவாரணம் அமைப்பு பெருமையுடன் வழங்கும்
பொன்மனச் செம்மல், ஏழைகளின் இதய தெய்வம் எம்.ஜி.ராமச்சந்திரன்
அவர்களின் வாழ்வை கொண்டாடும் முகமாக
MGR 108
மாபெரும் இன்னிசை விருந்து
Metropolitan Centre
3840 Finch Ave East
Scarborough
அவர்களின் அட்டகாசமான பாடல்களுடன், அவரின் சில அபிமான நடிகர்களின் முத்தான பாடல்களையும்
பாடி உங்களை மகிழ்விக்க ஆவலோடு உள்ளோம். வருகை தந்து உயிர்கள் காத்திடுவீர்
SCAN ME
Life-Saving Surgeries | Hospital Equipments | Livelihood Assistance | Mobile Medical Clinic
416-200-7652, 647-526-7652
www.Nivaranam.com
$30, $60, $100
திரட்டப்படும் நிதி முழுவதும் தாயகத்தில் நலிந்த நோயாளிகளின் இருதய – சிறுநீரக் சத்திரசிகிச்சைகளுக்காகவும், மருத்துவ கட்டுமானங்களுக்காகவும்,
கிளிநொச்சியில் மாற்றுத் திறனாளிகளுக்கான நடமாடும் மருத்துவ சேவைக்காகவும், வாழ்வாதர உதவிகளுக்கும், இதர தேவைகளுக்கும் பயன்படுத்தப்படும்.
100% of proceeds will be used for projects without any expenses deducted
முழு நிதி விபரங்களும் சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் | Thanks to all our Media Partners
செந்தில் குமரனின் நிவாரணம் (கனடா)
FREE PARKING


Senthil Kumaran's Relief Agency (Canada)
www.Nivaranam.com
OUR PROJECTS
Life-Saving Surgeries
Livelihood Assistance
Mobile Medical Clinic
உயிர் காக்க உதவுங்கள்
HELP SAVE A LIFE
WE SAVED OVER 125 LIVES THROUGH OUR HEART SURGERY PROJECT
$139,768.75 (Rs. 31,609,806.03) donated to 3 hospitals in Northern Sri Lanka, with Hon. Eric Walsh, the Canadian High Commissioner as our Chief Guest
Two Dialysis Machines donated to Chavakachcheri Hospital
One Dialysis Machine donated to Mallavi Hospital
Echo Machine with TOE probes donated to the Jaffna Hospital - $94,599.20 (Rs. 21,688,956.03)
100 LIFE-SAVING HEART SURGERIES
The crossing of 100 life-saving Heart surgeries was celebrated @ the Lanka Hospital on the 4th of March 2023, with Mr. Daniel Bood, from the Canadian High Commission, as the Chief Guest
We are glad to announce that the "Canada—Mallavi Dialysis Unit" at the Mallavi Base Hospital has been funded at $47,407 (Rs 12,800,000)
The dialysis machines funded in Mallavi, Mancholai, and Chavakachcheri have been operating effectively and benefiting patients
"Toronto - Mullai" dialysis clinic at the Mancholai has been funded at $14,236.53 (Rs 3,582,080)
416 200 7652
DONATIONS CAN BE SENT TO - INFO@NIVARANAM.COM

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்

# தமிழக மீனவர்கள் வாழ்வதாரத்துக்காக கடற்றொழில் செய்கின்றார்கள் என்றால், நாங்கள் பொழுது போக்கிற்காகவா மீன்பிடியில் ஈடுபடுகின்றோம்

## ஸ்டாலினுக்கு பதிலடி கொடுத்த யாழ்ப்பாண மீனவர்கள்!

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வாழ்வாதாரத்திற்காக மீன்பிடியில் ஈடுபடுகின்றார்கள் என்றால் நாங்கள் பொழுது போக்கிற்காகவா மீன்பிடியில் ஈடுபடுகின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட மீன்பிடி கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதி திரு.மகேசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

11-01-2025 அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மாளினத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தங்களுடைய மீனவர்கள் வாழ்வாதார நோக்கத்திற்காக எங்களுடைய கடல் எல்லைக்குள் வந்ததாகவும், அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்யுமாறு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். ஏறக்குறைய 30 வருடங்களாக, இந்திய மீனவர்களை கைது செய்வதும் விடுவதும் தொடர்கதையாக காணப்படுகின்றது.

அவர்கள் வாழ்வாதாரத்திற்காக கடலுக்கு வந்தால் நாங்கள் பொழுதுபோக்கிற்காக கடலுக்கு செல்வதில்லை. நாங்களும் வாழ்வாதாரத்திற்காக தான் கடல் தொழிலுக்கு செல்கின்றோம். இந்தியா இழுவைப் படகின் அட்டகாசத்தினால் நாங்கள் நமது கடலில் தொழில் செய்ய முடியவில்லை. தமிழக முதலமைச்சரே எமது மக்களின் வாழ்வுரிமையையும் பற்றி சற்று நீங்கள் சிந்தியுங்கள்.



உங்களுடைய கடற்பகுதியில் பாகிஸ்தான் மீனவர்களோ அல்லது சீன மீனவர்களோ வந்து மீன்பிடியில் ஈடுபட்டால் அவர்களை வாழ்வாதார அடிப்படையிலேயோ அல்லது மனிதாபிமான அடிப்படையிலேயோ நீங்கள் விடுதலை செய்வீர்களா? நிச்சயம் நீங்கள் அவர்களை கைது செய்வீர்கள் இன்றைக்கும் உங்கள் எல்லையில் நீங்கள் சண்டை செய்து கொண்டுதான் இருக்கின்றீர்கள். அதுபோல எங்களது எல்லைக்குள் நீங்கள் வரவேண்டாம்.

எங்களது வளங்களை சுரண்டிக்கொண்டு, வாழ்வாதாரம் மனிதாபிமானம் என்று பொய்களை கூறிக்கொண்டு எங்களது மக்களை நிர்க்கதியாக்குகின்றீர்கள். எனவே உங்களது கடற்படையினை வைத்து உங்களுடைய மீனவர்களை எல்லை தாண்ட விடாது கட்டுப்படுத்துங்கள் எங்களது வளங்களை நாங்கள் பாதுகாத்துக் கொள்கின்றோம் என்றார்.

# இந்திய துணைத் தூதரகத்தால் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கல்!



12ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த 50 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் இவ்வாறு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதுவர் திரு. சாய்முரளி, பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் திரு. சத்தியசீலன், கிராம சேவகர் திரு. பைகுந்தன் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.







இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் மனைவியின் காதை வெட்டியவருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய் பகுதியில் மனைவியின் காதை வெட்டியவரை விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் நீதிமன்று உத்தரவிட்டது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், வட்டுக்கோட்டையைச் சேர்ந்த பெண் ஒருவர் தனது கணவனின் சித்திரவதை தாங்காது சண்டிலிப்பாயில் உள்ள உறவினரின் வீட்டில் வசித்து வருகின்றார். இந்நிலையில் அங்கு சென்ற கணவன் கடந்த 07.10.2024 அன்று மனைவியின் காதினை வெட்டிவிட்டு தப்பி வந்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னர் இச்சம்பவம் குறித்து கடந்த 10.10.2024 அன்று மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபருக்கு எதிராக வேறு சில முறைப்பாடுகள் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திலும் காணப்படுகிறது. இந் நிலையில் குறித்த சந்தேகநபர் 10-01-2025 வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேகநபர் இதற்கு முன்னரும் மனைவியின் தலை மற்றும் காலை உடைத்து, பல்வேறு சித்திரவதைகளை புரிந்தவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரை இன்றையதினம் 11-01-2025 மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

# ஈழ நிசான் அறக்கட்டளையால் புங்குடுதீவு பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் 725 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பெற்றன!



ஈழ நிசான் அறக்கடையால் 725 மாணவர்களுக்கு, 7 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் 12ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் வழங்கி வைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் - புங்குடுதீவு பகுதியில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, புங்குடுதீவு அம்பலவாணர் கலையரங்கில் வைத்து இவ்வாறு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்கத்தேய இசை வாத்தியங்கள் முழங்க விருந்தினர்கள் மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அதனை தொடர்ந்து மங்கல விளக்கு ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து இறை வணக்கம், வரவேற்புரை, தலைமையுரை விருந்தினர்கள் உரை என்பன இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

ஈழ நிசான் அறக்கட்டளையின் செயலாளர் பு.கிரிதரன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனும், சிறப்பு விருந்தினராக தீவக வலய கல்விப் பணிப்பாளரும், கௌரவ விருந்தினராக ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தின் கீழ் உள்ள தீவக வலய பொலிஸ் பொறுப்பதிகாரி திரு.சேந்தனும் கலந்து சிறப்பித்ததுடன், மாணவர்கள், பெற்றோர், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.





# இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன்

## தமிழ்நாட்டுக்குச் சென்று தாயகம் திரும்பிய சிறிதரன் எம்.பி தெரிவிப்பு!



இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ் சிறிதான் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் கிளிநொச்சி கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக தமிழக முதலமைச்சருடன் பேசுவதற்கு சந்தர்ப்பம் கேட்டுள்ளேன். வெகு விரைவில் இந்திய இலங்க மீனவர் பிரச்சினை தொடர்பான சந்திப்பு நடைபெறும்.

தமிழக அரசின் அழைப்பின் பிரகாரம் சென்னையில் அயலகத் தமிழர் தின நிகழ்வில் அண்மையில் கலந்து கொண்ட போதே தமிழக முதலமைச்சரிடம் இக்கோரிக்கையை விடுத்திருந்தேன். அதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் நாடாத்தப்படும் என முதல்வர் தெரிவித்தார் என்றும் எம்பி ஸ்ரீதரன் அங்கு தெரிவித்தார்.

# சாவகச்சேரி வைத்தியசாலையில் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் 42வது இரத்ததான முகாம்!




விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டம் ஊடாக, அண்மையில் மீள திறக்கப்பட்ட சாவகச்சேரி வைத்தியசாலையின் இரத்த வங்கியினை சிறந்த முறையில் செயற்பட வழிவகுப்பதற்கு மாபெரும் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தின் இந்த 42வது இரத்த தான முகாமானது எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே இரத்ததானம் செய்வதற்கு ஆர்வமுள்ள கொடையாளர்கள் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள 0773241755 அல்லது 0772988917 என்ற இலக்கத்தை தொடர்புகொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக காரியாலயம் வடமராட்சி கிழக்கில் திறந்துவைக்கப்பெற்றது!






தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட நிர்வாக காரியாலயம் வடமராட்சி கிழக்கு தாளையடி பகுதியில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரனால் 15ம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பிரதேச இணைப்பாளர் மாடசாமி செல்வராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் த.தங்கரூபன், பிரதேச கடற்றொழில் சங்கங்களின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், மருதங்கேணி இலங்கை வங்கி முகாமையாளர், உட்பட கட்சியின் பிரதேச ஆதரவாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் சர்வமத தலைவர்களின் பங்கேற்புடன் இடம்பெற்ற இன, மத நல்லிணக்க பொங்கல்!



15ம் திகதி புதன்கிழமையன்று தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் மாவட்ட சர்வ மதக் குழு உறுப்பினர்களும், SOND நிறுவனத்தினரும் இணைந்து நடாத்திய தைப்பொங்கல் நிகழ்வு யாழ்ப்பாணம் - சுண்டுக்குழியில் உள்ள SOND அலுவலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் விருந்தினர்களாக கேதீஸ்வரசர்மா குருக்களும், அருட்தந்தை அருட்பணி. செபஸ்ரியாம்பிள்ளை அன்ஸ்லி றொஷான் அடிகளாரும், மௌலவி அஸ்லம் அவர்களும் இணைந்து சிறப்பித்தனர்.

மேலும் யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் இன மத பாகுபாடின்றி ஒரே குடும்பமாக இணைந்து பொங்கல் பொங்கினர்.



நிகழ்வின் இறுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இக் கலந்துரையாடலை யாழ்ப்பாணம் மாவட்ட சர்வமதக் குழு இணைப்பாளர் ஜென்சி வசதிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் கைதிகளை விடுவியுங்கள்!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் அநுரவின் அரசுக்கு இடித்துரைப்பு



"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்று அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறுகிறார். இவர் முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்காராவின் தம்பி மகன். இன்றைய ஜேவிபி அரசில் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர். அன்று அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கி போராடிய தமது கட்சி அங்கத்தவர்களை "அரசியல் போராளிகள்" என்று கூறிய ஜேவிபி, இன்று தமிழ் அரசியல் போராளி கைதிகளை "அரசியல் கைதிகள்" என அங்கீகரிக்க மறுக்கிறது.

இது எங்களுக்கு பழகி போன ஒரு பழைய பல்லவி. இன்று புது புரட்சி மாற்றம் செய்ய போகிறோம் என்று கூறி ஆட்சிக்கு வந்த புரட்சி அரசாங்கமும் அதே அரைத்த மாவையே அரைக்கிறது. இப்படியான பல பல்லவிகளை கேட்டு, முரண்பட்டு, ஜனநாயக ரீதியாக போராடிய வரலாற்றை கொண்ட எமக்கு, இது பழகி போன ஒரு மேலாதிக்க அரசியல் கருத்து.

"அரசியல் கைதிகள் இல்லை" என்ற பழைய பல்லவியை பாடாமல் தமிழ் அரசியல் கைதிகளை உடனேயே விடுவியுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி அநுரவின் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் கருத்து தொடர்பில் மனோ எம்பி மேலும் கூறியதாவது,

"சிறையில் அரசியல் கைதிகள் இல்லை" என்ற கருத்தைத்தான் எப்போதும் எல்லா சிங்கள பெரும்பான்மை அரசாங்கங்களிலும், எல்லா அமைச்சர்களும் சொன்னார்கள். அரசாங்க தரப்பு அப்படிதான் சொல்வார்கள். அவர்களுக்கு "பயங்கரவாதி". மக்களுக்கு "போராளி". பாலஸ்தீனம் முதல் இலங்கை வரை, உலகம் முழுக்க போராட்டங்கள் நிகழ்ந்த நாடுகளில் இப்படி தான்.

இந்நாட்டில், 1971ல் தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே ஆயுதம் தூக்கி பின்னர், 1989லும் ஆயுதம் தூக்கி ஜேவிபி போராட்டம் செய்த போது, கைதாகி சிறையில் இருந்த ஜேவிபி போராளிகளை, அன்றைய அரசாங்கம், "பயங்கரவாதிகள்" என்றது. ஆனால் ஜேவிபியினர், "இல்லை, அவர்கள் அரசியல் போராளிகள்" என்றார்கள்.

2015-2019 கால நமது நல்லாட்சியிலும் இடைக்கிடை ஓரிரு அமைச்சர்கள் இப்படி சொன்னார்கள். ஆனால் அன்றைய தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சராக இருந்து, அவர்களை கண்டித்து, அமைச்சரவைக்குள் அவர்களை புறந்தள்ளி, ஏனைய முற்போக்கு அமைச்சர்களுடனும், வெளியே தமிழ் தேசிய கட்சிகளுடனும் இணைந்து, கணிசமான தமிழ் அரசியல் கைதிகளை நாம் சத்தமில்லாமல் விடுவித்தோம். தமிழ் அரசியல் கைதிகளை அதிகமாக விடுவித்தது எமது நல்லாட்சி அரசாங்கம்தான். இதில் மாற்று பேச்சுக்கு இடமில்லை. இதனால்தான் இன்று வரை இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் எண்ணிக்கை கணிசமாக குறைந்தது.

ஆனால், அன்று ஆயுத போராட்டம் செய்த ஜேவிபியே, இன்று இப்படி கூறுகிறது. "அரசியல் கைதிகள் இல்லை" என்று கூறி, அவர்களுக்கு பயங்கரவாதிகள் பட்டம் சூட்ட முனைகிறது. 1971ல், தமிழ் இளைஞர் ஆயுதம் தூக்க முன்னமே, ஆயுதம் தூக்கிய தமது அங்கத்தவர்களை அரசியல் போராளிகளாக அடையாளம் காணும் ஜேவிபி, கைதாகி சிறையில் உள்ள தமிழ் இளைஞர்களை, அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுகிறது. ஏன் இந்த இரட்டை வேடம்? என்று கேட்டுள்ளார் மனோ கணேசன் அவர்கள்.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

# வட மாகாணத்தில் இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும் என்கிறார் ஆளுநர் வேதநாயகன்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



இடைத்தரகர்களிடமிருந்து விவசாயிகள் காப்பாற்றப்படவேண்டும். விவசாயிகளின் உற்பத்திப் பொருட்களுக்கு நியாயமான சந்தைவிலை கிடைக்கவேண்டும். அதற்கு ஏற்றவகையில் பொருளாதார மத்திய நிலையங்களை இந்த ஆண்டு மீளத் திறப்பதற்கு திட்டமிட்டு வருகின்றோம் என வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தெரிவித்தார்.

மறவன்புலோ கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் நெல் அறுவடை விழாவும் கமக்காரர் கௌரவிப்பு நிகழ்வும் மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயத்தில் 13ம் திகதி அன்று திங்கட்கிழமை காலை (13.01.2025) இடம்பெற்றது.

ஆளுநர் தனது பிரதம விருந்தினர் உரையில், தற்போதைய காலநிலை மாற்றம் விவசாயிகளுக்கு பெரும் சவாலாக மாறியிருக்கின்றது. முன்னைய காலங்களில் நெல் அறுவடையின்போது மழை பெய்வதில்லை. ஆனால் இப்போது மழையின் பாதிப்பை நாம் எதிர்கொண்டிருக்கின்றோம். கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ஒரு சில நாள்களுக்குள் கடும் மழை பெய்தபோதும் தெய்வாதீனமாக மிகப் பெரியளவு நெல் அழிவு ஏற்படவில்லை. அந்த மழை மற்றும் இப்போதும் பெய்யும் மழை என்பனவற்றால் உங்களின் வயல் நிலங்கள் ஈரலிப்பாக உள்ளன. எனவே இதை விவசாயிகள் சாதகமாக பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

நெல் அறுவடை முடிந்த பின்னர் சிறுதானியங்களை பயிரிடுங்கள். அதற்கான விதைகளை வழங்குவதற்கு விவசாயத் திணைக்களம், பிரதம செயலர் ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளது. வடக்கின் ஏனைய 4 மாவட்டங்களும் குளத்தை நம்பி இருபோகத்தை மேற்கொள்கின்றன.

யாழ்ப்பாணத்தில் நெற்செய்கை என்பது வான்பார்த்த பயிராகவே உள்ளது. மழையை நம்பி ஒருபோகம் மாத்திரமே செய்கின்றோம். எனவே தற்போதுள்ள காலநிலையின் மாற்றத்தைப் பயன்படுத்தி சிறுதானியப் பயிர்செய்கையில் ஈடுபட்டு விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளவேண்டும்.

எமது மண்ணின் தன்மைக்கு ஏற்பவும், எந்தப் பயிரை உற்பத்தி செய்தால் ஏற்றுமதி செய்யலாம் என்பதையும் ஆராய்ந்து அதற்கு ஏற்ப விவசாய நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கவேண்டும். அதற்கு விவசாயத் திணைக்களம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும்.

நெல் அறுவடையுடன் சேர்த்து மூத்த விவசாயிகளை கௌரவித்திருந்தீர்கள். அதற்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

இன்று இளையோர் விவசாயத்தில் நாட்டம் குறைந்தவர்களாக மாறிவிட்டார்கள். வெளிநாட்டு மோகத்தில் அவர்கள் சிக்கியிருக்கின்றார்கள். அங்கு சென்ற பலர் இப்போது நாட்டுக்கு திரும்பிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கள் இளையோர்கள் விவசாயத்தில் இறங்கினால் நாம் உற்பத்தியில் சிறப்பான இடத்தைப்பெற முடியும். வடக்கு மாகாணத்தில் என்ன வளம் இல்லை? இலங்கையின் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடும்போது வடக்கு மாகாணத்திலுள்ளதுபோன்று வளங்கள் ஏனைய மாகாணங்களில் இல்லை. ஆனால் அதை உரிய வகையில் நாங்கள் பயன்படுத்தத் தவறியிருக்கின்றோம்.

விவசாயமும், கடற்றொழிலும் எமது மாகாணத்தின் முக்கியமான பொருளாதாரத் தூண்கள். அவை இரண்டையும் சார்ந்த தொழிற்சாலைகள் எமது பிரதேசத்தில் எதிர்காலத்தில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் அந்த உற்பத்திப்பொருட்களை பெறுமதி சேர் பொருட்களாகவும் மாற்றியமைக்க முடியும், என்றார் ஆளுநர்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி. சுகந்தினி செந்தில்குமரன், கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி. தெய்வநாயகி பிரணவன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக கைதடி பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.கபில்ராஜும் கலந்துகொண்டனர்.



பாடசாலை மாணவர்கள், ஊரவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்டாலினுடன் செல்ஃபி எடுக்க முண்டியடித்த எம்.பிகள், மீனவர்களது பிரச்சினையை பேசத் தயங்கியது ஏன் என கேள்வி எழுப்பும் யாழ். மீனவர்கள்!



இந்தியா - தமிழ்நாட்டில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றுக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், இ.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகிய ஆ.சுமந்திரன் ஆகியோர் 12-01-2025 அன்றைய தினம் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்தனர்.

இதன்போது இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் குறித்து பேசாமல் முதலமைச்சருடன் சிரித்துக்கொண்டு வெறுமனே செல்ஃபி எடுத்தமை வருத்தம் அளிப்பதாக யாழ்ப்பாணம் மாவட்ட மீனவ சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உப தலைவர் திரு.ரட்ணகுமார் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள சம்மேளனத்தின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மீனவர்களது பிரச்சினைகள் தொடர்ந்தும் தொடர்கதையாகவே உள்ளது. இலங்கை மீனவர்களின் வலைகள் மற்றும் தொழில் முதல்கள் இந்திய இழுவைப் படகுகளால் அழிக்கப்படுகின்றன. இது இவ்வாறு இருக்கையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய மீனவர்கள் வாழ்வாதாரத்துக்காக மீன்பிடியில் ஈடுபடும்போது இலங்கை கடற்படை கைது செய்ததாக குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான கருத்து பிழையானது என்றுகூட அவர்கள் முதலமைச்சரிடம் சுட்டிக்காட்டவில்லை.

கடந்த வருடம் நடுப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் சீறுவாணம் விட்டதுபோல, இந்திய இழுவைமடி தொழிலுக்கு எதிர்ப்பு தெரிவித்து, முல்லைத்தீவு பகுதியில் இருந்து யாழ்ப்பாணம் - பருத்தித்துறை நோக்கி ஒரு போராட்டத்தை முன்னெடுத்தனர். மக்களுக்காக இந்த போராட்டத்தை செய்கின்றார்கள், இது வரவேற்கத்தக்க விடயம் என்று அப்போது நாங்களும் சந்தோசப்பட்டோம். ஆனால் முதலமைச்சருடன் அவர்கள் சிரித்துக்கொண்டு செல்ஃபி எடுத்ததை பார்க்கும்போது, இலங்கை மீனவர்களது விடயம் நினைவில் கூட இல்லை என்பது போலதான் எமக்கு தெரிகிறது.

இந்த நிகழ்வுக்கு கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் தான் இந்த குழு சென்றதாக அறியமுடிகிறது. அதிலும் சிலருக்கு அழைப்பு விடுத்தும், சிலருக்கு அழைப்பு விடுக்காமலும் அந்த நிகழ்வுக்கு சென்றிருந்தனர். அங்கு சென்று கடற்றொழில் அமைச்சர் கூட மீனவர் பிரச்சினை குறித்து பேசியதாக ஊடகங்களில் செய்திகள் எவையும் வெளிவரவில்லை.

எங்களது மக்களின் வளங்களை அழித்தவர்கள்தான் முதலமைச்சர் ஸ்டாலினின் மக்கள். அவருடன் செல்ஃபி எடுக்க துணிந்த நீங்கள், அவரது காதிலாவது ஒருதடவை சொல்லியிருக்கலாமே இலங்கை மீனவர்களது பிரச்சினையை.

சிலவேளை இது குறித்து முதலமைச்சர் ஸ்டாலினிடம் சொல்வதற்கு உங்களுக்கு பயமிருக்கலாம். ஏனெனில் உங்களில் சிலருக்கு இந்தியாவில் வீடுகள், நிலங்கள் இருக்கலாம். ஆகையால் பிறகு அங்கு போவது உங்களுக்கு பயமாக அல்லது பிரச்சினையாக இருக்கும். ஆனால் வெளியே வந்து அங்குள்ள ஊடகங்களுக்கு என்றாலும் எமது மீனவர்களது வளங்கள் அழிப்பது குறித்து சொல்லுங்கள். எங்களது மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதை சொல்லுங்கள். அதை சொல்லிவிட்டு வாருங்கள் என்றார்.

# இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களுடன் இலங்கை அமைச்சர்கள் சந்திப்பு!



இலங்கை கடற்தொழில், நீரியல் வளங்கள் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் மற்றும் பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்புத் துறை துணை அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோர் 12-01-2025 அன்று மாலை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு அலுவலகத்தில் சந்திப்பு ஒன்றினை மேற்கொண்டனர்.

கட்சியின் மாநிலச் செயலாளர் பெ.சண்முகம், பொன்னாடை அணிவித்தும், நூல்களை வழங்கியும் இலங்கை அமைச்சர்களை வரவேற்றார். அமைச்சர்கள் இருவரும் மலையக பகுதியை சேர்ந்தவர்கள் என்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் நடைபெற்ற உரையாடலில் மத்தியக்குழு உறுப்பினர் உ.வாசுகி, மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எஸ்.கண்ணன், மாநிலக்குழு உறுப்பினர் இரா.சிந்தன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இலங்கையில் புதிதாக அமைந்துள்ள இலங்கை அரசுக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வாழ்த்து தெரிவித்ததோடு, தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் போது முன்னெழுகிற பிரச்சனைகள் குறித்து கவலை தெரிவிக்கப்பட்டது.

இலங்கை தோட்ட தொழிலாளர்களின் வாழ்விட, வாழ்வாதாரப் பிரச்சனைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்பது முன்வைக்கப்பட்டது. தமிழ்நாட்டு முகாம்களில் உள்ள இலங்கை தமிழர்களின் கடவுச்சீட்டு (பாஸ்போர்ட்) வழங்க வேண்டும். குறிப்பாக, கல்விக்காக வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது.

மாகாணத் தேர்தல்கள் நடத்துவது பற்றியும், தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வழங்குவது பற்றியும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும் எனக் கோரப்பட்டது.

இலங்கையின் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், தமிழர் இஸ்லாமியர் உள்ளிட்ட சிறுபான்மை இன மக்களின் பிரச்சனைகளில் உறுதியாக கவனம் செலுத்தும், மக்கள் தங்கள் மீது அதன் காரணமாகவே நம்பிக்கை வைத்துள்ளனர் என்று அமைச்சர்கள் தெரிவித்தனர். பரஸ்பர உறவு தொடர வேண்டும் என்ற கருத்து இருத்தரப்பிலும் பிரதிபலித்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாணம் வடமராட்சியில் இருவரிடம் தொலைபேசி ஊடாக 32 இலட்சம் ரூபா கொள்ளையடிக்கப்பெற்றது!

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு உடுத்துறையை சேர்ந்த பெண் ஒருவரிடம் கடந்த 07.01.2024 அன்று இரண்டு இலட்சம் ரூபா கொள்ளையிடப்பட்டுள்ளது.

0740313003 என்னும் இலக்கத்தில் இருந்து தொடர்பு கொண்டு தனியார் தொலைபேசி வலையமைப்பு நிறுவனத்தின் (Dialog) சீட்டிழுப்பு மூலம் பணப்பரிசு கிடைத்திருப்பதாக கூறி அவரின் வங்கி கணக்கு இலக்கம், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் வங்கி கணக்கில் உள்ள தொலைபேசி இலக்கம் என்பவற்றை பெற்று கடவுச்சொற்களையும் அவரின் அறியாமையை பயன்படுத்தி பெற்று அதன் மூலம் இலங்கை வங்கி கணக்கின் Smart pay செயலியில் உள்நுழைந்து ரூபா 200இ000/= பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

இதே முறையில் 0774650187 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்பு கொண்டு குறித்த பிரதேசத்தின் வேம்படியை சேர்ந்த முதியவர் ஒருவரிடமும் ரூபா 29 இலட்சத்து 22 ஆயிரம் ரூபா பணத்தை கொள்ளையடித்துள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட இருவரும் வங்கியில் முறையிட்ட பொழுதும், மக்கள் வங்கியின் கணக்கு ஒன்றிற்கு பணம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த வங்கி கணக்கின் விபரம் தமது செயலியில் காட்டப்படவில்லை என்றும் கூறியுள்ளனர்.

குறித்த பெண் மருதங்கேணி பொலிஸ் நிலையத்திலும் முதியவர் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

# ஊடக சுதந்திரத்தை பேணுமாறு 25 முன்னணி அமைப்புகள் ஜனாதிபதி அநுரவிடம் கோரிக்கை



- சிவா பரமேஸ்வரன்

உலகளவில் ஊடகவியலாளர்கள பாதுகாக்கும் முன்னணி அமைப்புகளில் ஒன்றான ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழுவுடன் (Committee to Protect Journalists) இணைந்து வேறு பல 24 சிவில் மற்றும் ஊடக சுதந்திர அமைப்புகள், இலங்கையில் ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க, ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களின் சுதந்திரத்தை பாதுகாக்க வலியுறுத்தியுள்ளது.

நியூயோர்க்கில் தலைமையகத்தைக் கொண்டு செயல்படும் ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழுவுடன் சர்வதேச பத்திரிகை நிறுவனம் (International Press Institute), சர்வதேச ஊடகவியலாளர்கள் சம்மேளனம், மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம் உட்பட 24 அமைப்புகள், ஊடகச் சுதந்திரத்தை ஜனாதிபதி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என கோரியுள்ளன.

சர்வதேச அளவில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளப் பாதுகாக்கும் சட்டங்களுக்கு உடன்படுவதாக இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது என்பதை அவர்கள் ஜனாதிபதிக்கு நினைவூட்டியுள்ளனர். மேலும் அந்த உடன்படிக்கை மாத்திரமன்றி நாட்டின் அரசியல் யாப்பிலும் ஊடகச் சுதந்திரத்தை பாதுகாக்கும் அம்சங்கள் உள்ளன என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழு தலைமையில் அந்த அறிக்கையில் கையெழுத்திட்டுள்ளவர்கள் தேசிய மக்கள் சக்தி தமது தேர்தல் அறிக்கையில் ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும், ஊடகவியலாளர்களுக்கு எதிராக முன்னர் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு பொறுப்புக் கூறப்படுவதை முன்னெடுத்து உறுதிபடுத்தப்படும் என கூறியிருந்ததையும் நினைவூட்டியுள்ளனர்.

"நாங்கள் புதிதாக தெரிவு செய்யப்பட்டுள்ள அரசிடம் இவ்வாறாக கோரிக்கை வைக்கிறோம்: கடந்த காலங்களில் ஊடகவியலாளர்களுக்கு எதிராக வன்முறைகள், ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்கள், மனித உரிமை மீறல்கள், கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக இடம்பெற்ற செயல்கள் ஆகியவை தொடர்பில் உடனடியாக மீள் விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். அவை பாரபட்சமற்ற முறையில் வெளிப்படையாக இருக்க வேண்டும் மேலும் இழைக்கப்பட்ட அநியாயங்களுக்கு பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதேவேளை இவை சில பல ஊடக்கவியலாளர்களின் மரணங்கள், கடத்தல்கள், உடல்ரீதியான தாக்குதல்கள் ஆகியவற்றுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்படாமல், 26 ஆண்டுகள் இடம்பெற்று 2009ஆம் ஆண்டு முடிவிற்கு வந்த போர்க் காலத்தில் இடம்பெற்ற தாக்குதல்கள்ளையும் உள்ளடக்க வேண்டும்".

25 அமைப்புகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், அவ்வகையில் முன்னெடுக்கப்படும் விசாரணைகள், சட்டவிரோத மரணங்களாக இருக்கக்கூடும் வழக்குகளின் விசாரணை ஐக்கிய நாடுகள் மன்றத்தின் "மின்னசோட்டா நெறிமுறைகளின்" (UNA Minnesota Chapter) அடிப்படையில் இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளன.

"சட்டவிரோதமான படுகொலைகளை காத்திரமான வகையில் தடுப்பது மற்றும் அதை விசாரிப்பது, தன்னிச்சையான, அழித்தொழிக்கும் படுகொலைகளை குறித்த சட்ட நடவடிக்கைகள்" தொடர்பில் அந்த மின்னசோட்டா நெறிமுறைகளை 20 முக்கிய கோட்பாடுகளை கூறுகிறது. இந்த நெறிமுறைகளை அனைத்து நாடுகளும் பின்பற்ற வேண்டும் என்று எதிர்ப்பாக்கப்படுகிறது. அனைத்து நாடுகளும் அனைவரின் உயிர்களையும் மதித்து பாதுகாக்க வேண்டும் என்றும், சந்தேகத்திற்குரிய மரணங்களை உறுதியான வகையில் சர்வதேச சட்டங்களில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அம்சங்களில் அடிப்படையில் விசாரிக்க வேண்டிய கடப்பாடுகளை அந்த மின்னசோட்டா நெறிமுறை வலியுறுத்துகிறது.

"சந்தேகத்திற்குரிய வகையில் இடம்பெற்ற சட்டவிரோதமான அனைத்து படுகொலைகள், இயற்கைக்கு மாறான மரணங்கள் எனக் கருதப்படுபவை போன்றவைகள் மீது உடனடியாக, முழுமையான, பாரபட்சமற்ற முறையிலான விசாரணைகள் இடம்பெற வேண்டும். இதில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் அளிக்கும் முறைப்பாடுகளும் அடங்கும். அப்படியான விசாரணைகளை முன்னெடுக்க அரசு உரிய விசாரணை அலுவலகங்கள் மற்றும் வழிமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும். அந்த விசாரணையின் நோக்கமானது மரணத்திற்கான காரணம், எப்படி அது நிகழ்ந்தது, எந்த நேரம் அல்லது சமயத்தில் இடம்பெற்றது, அதற்கு பொறுப்பானவர் யார், அல்லது அந்த மரணம் சம்பவிப்பதற்கு தொடர்ச்சியான மாதிரிகள் அல்லது நடவடிக்கை ஏதாவது இருந்துள்ளதா" போன்றவை ஆராயப்பட வேண்டும் என்று அந்த நெறிமுறைகளில் "விசாரணை" என்ற தலைப்பின் கீழ் கூறப்பட்டுள்ளது.

அப்படிப்பட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படும் வேளையில் அது திறன்பட இருக்க வேண்டுமென்றும் அச்சமயத்தில் சாட்சியம் அளிப்பவர்கள் மற்றும் விசாரணையாளர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் கைச்சாத்திட்டுள்ளவர்கள் கோரியுள்ளனர்.

லசந்த விக்ரமதுங்க, தர்மரட்ணம் சிவராம் "தராக்கி" மற்றும் பிரகீத் எக்நெலிகொட போன்ற ஊடகயவிலாளர்களின் மரணம் தொடர்பில் எவ்வித காத்திரமான விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த 2005ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட சிவராம் வழக்கு உட்பட 7 வழக்குகள் மீண்டும் விசாரிக்கப்பட்ட அண்மையில் உத்தரவிடப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள அவர்கள், அந்த மீள் விசாரணையும் இழுத்தடிக்கப்படாமல், குறித்த காலத்திற்குள்ளும், திறன்படவும் முடிக்கப்பட்டு தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்துவது உறுதி செய்யப்பட வேண்டும் என்று கோரியுள்ளனர்.

மேலும், ஊடகவியலாளர்கள், குறிப்பாக தமிழர்கள் மீதான துன்புறுத்தல், அச்சுறுத்தல் ஆகியவை உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டுமென ஜனாதிபதியிடம் கோரப்பட்டுள்ளது. அவர்கள் நீண்டகாலமாக தமது செய்தி சேகரிப்பு பணியின் போது கண்காணிக்கப்படுவதும், தேவையில்லாத தடைகள் விதிக்கப்படுவதையும் எதிர்கொண்டு வருகிறார்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர். "ஊடகவியலாளர்கள் மீது அவர்கள் பணி தொடர்பாக கொண்டுவரப்பட்டுள்ள குற்ற வழக்குகளை சட்டத்தை நிலைநாட்டு அதிகாரிகள் மீளப்பெறுவதற்கு வழி செய்ய வேண்டும். மேலும் "பொதுச் சேவை ஊழியர்களை அச்சுறுத்துவதான" குற்றச்சாட்டில் அவர்கள் மீது அதிகாரிகள் சட்ட நடவடிக்கைகள் ஏதும் எடுக்கக்கூடாது".

இந்தாண்டு ஜனவரி மாதம் 13ஆம் திகதியிட்டுள்ள அவர்களின் அறிக்கையில், ஊடகச் சுதந்திரத்திற்கு நேரடியாக அச்சுறுத்தல் விடுக்கும் இணையதள பாதுகாப்புச் சட்டமும், கொடூரமான பயங்கரவாத தடைச் சட்டமும் கடுமையான விமர்சனத்திற்கு ஆளாகியுள்ளன.

"கருத்துச் சுதந்திரம் உட்பட மனித உரிமைகளை கடுமையாக நசுக்கும் அந்த நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம், இணையதளத்தில் வெளியாகும் விடயங்களை கடுமையாக தணிக்கும் செய்யும் ஆணைக்குழுவிற்கு அதி கூடிய அதிகாரங்கள் வழங்கும் நிலையில், அது இரத்து செய்யப்பட வேண்டும்".

அந்த சட்டத்திற்கு மாற்றாக புதிய இணையபாதுகாப்புச் சட்டம் ஒன்று ஏற்படுத்தப்படலாம் என கருத்து வெளியிட்டுள்ள அவர்கள், அது இணையவழியாக ஏற்படுத்தும் நியாயமான தீங்குகளை தடுக்க முயன்றாலும், இணையத்தில் கருத்துச் சுதந்திரம் மற்றும் தனிமனித சுதந்திரத்தை நியாயப்படுத்த முடியாத வகையில் கட்டுப்பாடுகளை விதிக்கக்கூடாது எனவும் கோர்யுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டம் ஊடகவியலாளர்களை மாத்திரமன்றி காலவரையின்றி மக்களை தடுத்து வைக்கும் ஒரு ஆயுதமாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்று ஏகமனதாக அந்த 25 அமைப்பினரும் கண்டித்துள்ளனர்.

"ஊடகவியலாளர்களை அவர்களின் பணிக்காக மிக நீண்டகாலமாக அச்சுறுத்தி, சிறையில் அடைப்பதற்கு பயன்படுத்தப்பட்டு வரும் பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட குற்றங்கள் ஏதாவது இருந்தால் அவை நாட்டில் காணப்படும் குற்றவியல் சட்டங்களுக்குள் கொண்டுவரப்பட்டு, தீர்வு காணப்பட வேண்டும்".

நாடாளுமன்ற (அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள்) சட்டத்தையும் திருத்த வேண்டும் என்றும் அவர்கள் கோருகின்றனர். அந்த சட்டம் பொது நலனில் தொடர்புடைய முக்கியமான விடயங்கள் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும் போது அது குறித்து செய்தி வெளியிடுவதற்கு பெரும் தடையாக உள்ளது என்றும், நாடாளுமன்ற குழுக்களின் கூட்டங்களுக்கு செய்தி சேகரிக்க ஊடக அனுமதி அதிகரிக்கப்பட வேண்டும், நல்லுறவு பேணப்படும் வகையில் அது இருக்க வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

புலனாய்வு விசாரணை செய்திகளுக்கு மிகவும் அவசியமான தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நீர்த்துப்போகச் செய்யும் தனிநபர் தரவுகள் பாதுகாப்புச் சட்டத்தை திருத்த வேண்டும் என்றும், அப்படியான அம்சங்கள் அந்த சட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டுமென்றும் அந்த அறிக்கை வேண்டிநிறது.

எல்லையில்லா ஊடகவியலாளர்கள் அமைப்பு, பெண் இண்டர்நேசனல், சர்வதேச மனித உரிமைகள் சம்மேளனம் ஆகியோரும் இந்த அறிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

ஊடகத்துறை தொடர்பாக சுய தணிக்கை ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்த அவர்கள் ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்கவை வேண்டியுள்ளனர். அந்த ஆணைக்குழு ஊடகவியலாளர்கள் மீது தேவையற்ற கட்டுப்பாடுகளை விதிக்காமல், அவர்களை குற்றவாளிகள் போன்று சித்தரிக்காமல், ஊடக அறம் மற்றும் ஊடகச் சுதந்திரம் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் இருக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரியுள்ளனர்.

"அந்த ஆணைக்குழு நேர்மையாகவும் நியாயமான வகையிலும் ஊடகத்துறையிலிருந்து போதிய பிரதிநிதித்துவத்தையும் கொண்டிருக்க வேண்டும், மேலும் ஒரு நீதிமன்றத்தில் அதன் முடிவுகளை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் உரிமையும் வழங்கப்பட வேண்டும்".

ஜனாதிபதி அனுர குமார திஸநாயக்க, தான் மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சியை மதிப்பவர் என நிரூபிக்க அவருக்கு ஒரு வரலாற்று வாய்ப்பு உள்ளது என்பதையும் அவர்கள் இந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "மியன்மாருக்கு ரோஹிங்கியாக்கள் நாடு கடத்தப்படமாட்டார்கள்" என போராட்டக்காரர்களுக்கு வாக்குறுதி

போரினால் பாதிக்கப்பட்ட வன்னியில் உள்ள விமானப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியா போர் அனாதைகள் பலவந்தமாக வெளியேற்றப்படமாட்டார்கள் என ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளர் உறுதியளித்துள்ளதாக, அதுத் தொடர்பில் கொழும்பில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து மனுவொன்றையும் சமர்ப்பித்த, போராட்டத்திற்கு தலைமை வகித்த, காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைக் குழு தெரிவிக்கின்றது.

"அவர்கள் மியன்மாருக்கு திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என்ற யோசனையை அரசாங்கம் எடுத்துள்ளது என்பதை அவர் ஏற்றுக்கொண்டார். ஆனால் அவர்களை சுதந்திரமான சூழலில் வைக்குமாறு கோரிக்கைகளை முன்வைத்தோம். நாங்கள் பேச்சு நடத்துகிறோம் எனக் கூறினார்கள், ஒரு சுதந்திரமான சூழலில் அவர்களை வைக்க வேண்டும் என்பதை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்."

பல சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதன் பின்னர் ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரைச் சந்தித்து, மகஜரை கையளித்த பின்னர், தலைநகரில் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட நவ சமசமாஜக் கட்சியுடன் இணைந்த காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைக் குழுவின் ஏற்பாட்டாளர் சுந்தரம் மகேந்திரன் இந்த விடயத்தை தெரிவித்தார்.

போர் அச்சம் காரணமாக மியன்மாரில் இருந்து தப்பி வந்த ரோஹிங்கியாக்களை மீண்டும் அந்த நாட்டுக்கு நாடு கடத்தக்கூடாது என வலியுறுத்தி சிவில் ஆர்வலர்கள், அரசியல் தலைவர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பலர் கடந்த வார இறுதியில் கொழும்பில் அமைந்துள்ள ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



"இலங்கையில் இருந்து ரோஹிங்கியாக்களை சுத்தப்படுத்தாதே, மியன்மார் பயங்கரவாதத்திலிருந்து தப்பி ஓடிய ரோஹிங்கியாக்களை காப்பாற்று, ரோஹிங்கியா போர் அனாதைகளை இராணுவ முகாமில் அடைத்தது யாருடைய உத்தரவில்?, ரோஹிங்கியாக்களை இலங்கையிலிருந்து வெளியேற்றாதீர்கள்" போன்ற வசனங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தை நடத்தினர்.

உயிர் தப்பி இந்த நாட்டிற்கு வருகைத்தந்த மியன்மார் ரோஹிங்கியா முஸ்லிம்களை பாதுகாப்பது இந்த நாட்டு பிரஜைகளின் பொறுப்பு என, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட, காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைக் குழுவின் அழைப்பாளர் சுந்தரம் மகேந்திரன் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"ரோஹிங்கியா முஸ்லிம்கள் மீது மியன்மார் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. கொல்கிறார்கள். வாழும் ஆசையோடும், வாழும் உரிமையோடும் அந்த நாட்டை விட்டு வெளியேறி, கடல் மார்க்கமாக இன்று இலங்கைக்கு வந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்டவர்கள். இதில் சிறு குழந்தைகள் உள்ளனர். அவர்களைப் பாதுகாப்பது இந்த நாட்டின் குடிமக்களாகிய நமது பொறுப்பு."

யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் வடக்கிலும் தெற்கிலும் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமைக்கு எதிராக தனது உயிரைப் பணயம் வைத்து நீதிக்காக தொடர்ச்சியாக வாதிட்டு வரும் மனித உரிமை செயற்பாட்டாளரான காணாமல் ஆக்கப்பட்டோர் விசாரணைக் குழுவின் அழைப்பாளர் சுந்தரம் மகேந்திரன். ரோஹிங்கியா முஸ்லிம்களை இராணுவ முகாமில் தடுத்துவைத்ததற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணத்தையும் வெளிப்படுத்தினர்.

"அவர்களை இராணுவ முகாமில், இராணுவக் காவலில் வைத்திருப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். ஏனென்றால் அவர்கள் இராணுவ பயங்கரவாதத்திற்கு பயந்து இந்த நாட்டிற்கு வந்தனர். அவர்கள் இங்கு வந்த பிறகும், இப்போது மீண்டும் இராணுவ முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர், அதாவது அந்தக் குழந்தைகள் இன்னும் மன அழுத்தத்திலும் பயத்திலும் இரவைக் கழிக்க வேண்டியுள்ளது. எனவே, அவர்களை உடனடியாக இராணுவ முகாமிலிருந்து வெளியே ஒரு சுதந்திரமான பொது சூழலுக்கு அழைத்துச் சென்று அவர்களுக்கு பாதுகாப்பு, வைத்தியம், உணவு மற்றும் பிற வசதிகளை வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்."

போர் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்த முகாமுக்குள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நுழைவதை விமானப்படை தடுத்ததையும் மனித உரிமை ஆர்வலர் கண்டனம் செய்திருந்தார்.

"அரசாங்கத்தால் அதைச் செய்ய முடியாவிட்டால், அவர்களை உடனடியாக ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்வார்கள். ஆனால் அரசாங்கம் முகாமுக்குள் நுழைந்து அவர்களைப் பார்க்கவோ அல்லது அவர்களின் நலம் குறித்து கேட்கவோ கூட அனுமதிக்கத் தயாராக இல்லை."

போரினால் பாதிக்கப்பட்ட வன்னியைச் சேர்ந்த மீனவர்களால் கடலில் சிக்கித் தவித்த ரோஹிங்கியாக்கள் குழு மீட்கப்பட்டது. அத்தகைய தமிழர்களுக்கு எதிராக கடுமையான மனித உரிமை மீறல்கள் நடந்த வரலாற்றையும் சுந்தரம் மகேந்திரன் நினைவு கூர்ந்தார்.

மியன்மாரில் இருந்து தப்பி வந்த ரோஹிங்கியாக்கள் குழு வலுக்கட்டாயமாக மியன்மாருக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு கூறிய பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அந்த கருத்தில் இருந்து பின்வாங்கி, "அவர்கள் அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டால்" சர்வதேச சட்டத்திற்கு அமைய செயற்படத் தயாராக இருப்பதாகக் கூறினார்.

இருப்பினும், வரும் நாட்களில் மேலும் ஒரு இலட்சம் சட்டவிரோத குடியேறிகள் இலங்கைக்கு வருவார்கள் என புலனாய்வுத்துறை அறிக்கைகளை மேற்கோள் காட்டி எச்சரித்த அமைச்சர் ஆனந்த விஜேபாலவின் கருத்தை கண்டித்த சுந்தரம் மகேந்திரன், உள்நாட்டு மக்களைத் தூண்டிவிடுவதற்காக அரசாங்கம் இதுபோன்ற அறிக்கைகளை வெளியிடுவதாகக் குற்றம் சாட்டினார்.

"இலட்சக் கணக்கில் மியன்மார் குடிமக்கள் இலங்கைக்கு வருவார்கள்... வருவார்கள் எனக் கூறி மக்களைத் தூண்டிவிட வேண்டாம் என நாங்கள் அரசாங்கத்திடம் கூறுகிறோம். "எத்தனை பேர் வந்தாலும், அவர்களை அகதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டு அன்பதே முக்கிய குறிக்கோள்."

20 நாட்களுக்கும் மேலாக, முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள, மியன்மாரின் பயங்கரங்களில் இருந்து தப்பிவந்த ரோஹிங்கியாக்களை அவர்களது நாட்டுக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் என வலியுறுத்தும் வகையில், போரினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவில் போராட்டம் ஒன்று இடம்பெற்றிருந்தது.

மூன்று வாரங்களுக்கு முன்னர் இலங்கைக்கு வந்த 115 அகதிகள் தற்போது முல்லைத்தீவு விமானப்படை தளத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் படகை செலுத்திய குற்றச்சாட்டின் அடிப்படையில் 12 பேர் திருகோணமலை நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில், 2025 ஜனவரி 7ஆம் திகதி புதன்கிழமை விடுவிக்கப்பட்டனர்.

இவர்களில் நாற்பதுக்கும் மேற்பட்ட உள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. பாதுகாப்பான நாட்டில் அரசியல் தஞ்சம் பெறுவதே அவர்களின் எதிர்ப்பார்ப்பாகும். ரோஹிங்கியாக்களின் நலன் குறித்து விசாரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழு முல்லைத்தீவு விமானப்படை தளத்திற்குள் நுழைவதைத் தடுத்தமைக்காக குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் மன்னிப்பு கோரியிருந்தனர், எனினும் அதன் பின்னர் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் அங்கு சென்றார்களா என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

## தைமகளே தலைநிமிர்ந்து வா

தைமகளே பிறந்துவா தரணியில் தலைநிமிர்ந்து
தைத்திங்கள் திருநாள் கொண்டாட
கைமணக்கும் பொங்கலிட்டு களிப்புடன் நாமாட
கதிரவனே காலையில் கடுகிவா
கொத்தாய்ப் புதிரெடுத்து குளிர நீராடி
கோலமாய்ப் புத்துடை பூண்டே!
முத்தாய்க் கோலம் முற்றமெலாம் இட்டு
மட்டற மகிழ்ச்சி கண்டோமே!

பத்திரப் பானையில் பசும்பால் விட்டே
பொங்கிப் பாலது சரிந்திட
புத்தரிசி பச்சைப் பயறு கலந்து
பக்தியுடன் பானையில் இட்டோம்
சர்க்கரை சத்தான முந்திரி வற்றல்
சுத்தமான தேனும் சேர்த்து
சுரியில் சுழலும் உழவனைப் போற்றியே!
சிறப்பாய்ப் பொங்கலைச் செய்தோமே!

முற்றிய கரும்பும் முக்கனி தயிரும்
முற்றா இளநீரும் மலர்களும்
பற்றொடு செய்த பலகார வகையையும்
பரப்பி வைத்தோம் பக்கமாய்
பக்திப் பாட்டுடன் பட்டாஸ் வெடியுடன்
பரிதிக்கு படையல் செய்தோம்
பக்கத்து வீட்டார் பந்தியிற் கலந்தே!
பதமான பொங்கலைப் புசித்தோமே!


வருடம் ஒருநாள் வருமிந்தத் திருநாளை
வரவேற்று நிற்போம் வாசலில்
கருத்தொடு களிக்கும் களங்கமிலா நாளை
கனடா நாட்டில் நடத்தியே!
மரபுத் திங்களை மகிழ்வொடு கொண்டாட
மனமாய் அனுமதித்த கனடாவை
சிரத்தைத் தாழ்த்தி சிந்தை குளிர
சீராக நன்றி சொல்வோமே

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453


Happy Thai Pongal
&
Tamil Heritage Month
தை பொங்கல் மற்றும் தமிழ்
மரபுத் திங்கள் வாழ்த்துக்கள்
Hon.
MARY NG, MP
MARKHAM—THORNHILL
905-479-8100
Mary.Ng@parl.gc.ca
MaryNgMP.ca


Happy
Pongal
Wishing everyone a blessed Thai Pongal
and a Happy Tamil Heritage Month
Best wishes from Councillor Nick Mantas
& the Ward 22 Team
www.nickmantas.ca

# கிளீன் ஸ்ரீலங்கா: கிளீன் பண்ணக்கூடிய இடங்கள்



- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -

கடந்த வாரம் நான் எழுதிய கிளீன் ஸ்ரீலங்கா கட்டுரை தொடர்பாக ஒரு நண்பர் கருத்து தெரிவித்திருந்தார். ஸ்ரீலங்காவை ஓரளவுக்காவது கிளீன் பண்ணக்கூடிய இடம் சுற்றுச்சூழல் விவகாரங்கள்தான் என்பதை ஏற்றுக் கொண்டு அவர் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். நீண்ட தூரம் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களை சிரம பரிகாரத்துக்காக நிறுத்தும் இடங்களில் உள்ள சுகாதாரக் கேடுகளை அவர் சுட்டிக் காட்டியிருந்தார். குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்து வழியில் பேருந்துகள் இடைநிறுத்தப்படுகின்ற உணவகங்களில் உள்ள கழிப்பறை வசதிகளைக் குறித்து அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தை அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

நண்பர் அதை எனக்குக் கூறுவதற்கு முன்னரே நாட்டின் அரசுத் தலைவராகிய அனுர, கிளீன் ஸ்ரீலங்காவை அறிமுகப்படுத்தும் பொழுது நாடாளுமன்றத்தில் பின்வருமாறு உரையாற்றியிருந்தார்... “நம் நாட்டுப் பெண்கள் கழிப்பறைக்குச் செல்ல இந்த நாட்டில் சுத்தமான கழிப்பறை அமைப்பு இருக்கிறதா என்பதும் கேள்விக்குரியாகும், தூர இடங்களில் இருந்து கொழும்புக்கு வரும் சில பெண்கள் வீடு வரும் வரை தண்ணீர் அருந்துவதில்லை. சுத்தமான கழிப்பறை கட்டமைப்பொன்று இல்லாமையே அதற்கு காரணமாகும். கழிப்பறை கட்டமைப்பு கட்டப்பட்டாலும், சமூகத்தில் நல்ல மனப்பான்மை கட்டியெழுப்பப்படவில்லை. சாதாரண மக்களுக்கு பொது இடமாக அன்றி அவை அழிவுகரமான இடமாக மாறியுள்ளன. இதனால் என்ன தெரிகிறது? இது எமது நாட்டு ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவிடம் காணப்படுகின்ற அணுகுமுறையாகும். எனவே, தூய்மையான இலங்கை வேலைத்திட்டத்தின் ஊடாக அவ்வாறான மனோபாவத்தையும் மாற்ற எதிர்பார்க்கின்றோம்.”

அனுர அவ்வாறு பேசியபோதுதான் எனக்கு ஒரு விடயம் தெரிந்தது என்னவென்றால், தமிழ்ப் பெண்களைப் போலவே சிங்கள, முஸ்லிம் பெண்களுக்கும் உள்ள பொதுவான பிரச்சினை அதுவென்று. யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயணப் போக்குவரத்து நேரம் கிட்டத்தட்ட ஏழு மணித்தியாலம். இக்காலப் பகுதியில் பெரும்பாலான பெண்கள் நீர் அருந்துவதில்லை. ஏன் என்று கேட்டால் இடையில் அவர்கள் சிறுநீர் கழிப்பதற்காக நிறுத்தும் இடங்களில் சிறுநீர் கழிக்க முடியாது. அவை அசுத்தமாகவும் அருவருப்பாகவும் இருக்கும். அந்த இடத்தை நெருங்கும் பொழுதே துர்வாடை வீசும். அந்த இடத்தில் கால் வைப்பதற்கே கூசும். முறிகண்டியில் கட்டணம் செலுத்தும் கழிப்பறைகள் உண்டு. அங்கேயும் நிலைமைகள் பாராட்டும் அளவுக்குச் சுகாதாரமாக இல்லை.

பொதுக் கழிப்பறைகளை தொடர்ச்சியாகக் கழுவி, துப்புரவாகப் பேண மாட்டார்கள். அந்த அசிங்கத்துக்குள் போனால் சகல நோய்களும் தொற்றிக்கொண்டு விடும் என்ற அச்சம் ஏற்படும். எனவே சிறுநீர் கழிப்பதற்கு ஒரு நரகத்துக்குள் போவதை விடவும், சிறுநீரை 6 மணித்தியாலங்களுக்கு அடக்கி கொண்டிருப்பதை விடவும், நீரைக் குடிக்காமல் விடலாம் என்று ஒரு பகுதி பெண்கள் கருதுகிறார்கள். இதுவும் ஆபத்தானது. நீண்ட தூர, நீண்ட நேரப் பயணங்களில் நீரிழப்பால் உடலுக்கு ஏற்படக்கூடிய ஆபத்து அதிகம்.

அது சொகுசு வாகனம்தானே? குளிரூட்டப்பட்டது தானே? நீர் இழப்பு குறைவாக இருக்கும் என்று ஒரு விளக்கம் கூறப்படலாம். அவ்வாறு சொகுசு வாகனம், சொகுசுப் பயணம் என்று கூறி அதற்குத் தனியாகப் பணம் அளவிடும் வாகன உரிமையாளர்கள் ஏன் தாங்கள் வாகனங்களை நிறுத்தும் இடங்களிலும் சொகுசான, வளமான, சுகாதார வசதிகளைக் கொண்ட கழிப்பறைகளைக் கட்டக் கூடாது?

பொதுப் போக்குவரத்து வாகனங்களை சாப்பாட்டு இடைவேளைக்காக அல்லது சிரம பரிகாரத்துக்காக எங்கே நிறுத்துவது என்பதனை பயணிகள் தீர்மானிக்க முடியாது. வாகன உரிமையாளர்களும் சாரதிகளும்தான் அதைத் தீர்மானிக்கிறார்கள். அது வாகன உரிமையாளருக்கும் குறிப்பிட்ட சாப்பாட்டுக் கடைக்கும் இடையிலான ஒரு வணிக உடன்படிக்கை. இருதரப்புக்கும் அங்கு லாபம் உண்டு. பயணிகளை வைத்துப் பணம் சம்பாதிக்கும் இந்த இரண்டு தரப்புக்கும் பயணிகளுக்கான கழிப்பறைகளை சுகாதாரமாக பேண வேண்டிய பொறுப்பு உண்டு.

அவர்கள் வாங்கும் பயணச் சீட்டுக்குள் அந்தச் செலவும் அடங்குகிறது. பயணிகளின் கழிப்பறை வசதிகளை சுகாதாரமாகப் பேண வேண்டியது அவர்களுடைய பொறுப்பு. அதற்கும் சேர்த்துத்தான் கட்டணம் அளவிடப்படுகிறது. எனவே இந்த விடயத்தில் நீண்ட தூரப் பயணங்களில் ஈடுபடும் வாகன உரிமையாளர்களுக்கும் சாரதிகளுக்கும் அவர்கள் எந்தெந்த இடங்களில் நிறுத்துகிறார்களோ அந்த இடங்களில் உள்ள உணவக உரிமையாளர்களுக்கும் கூட்டுப் பொறுப்பு உண்டு. இவை அனைத்தையும் நிர்வகிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு.

இந்த விடயத்தில் பெண்கள் படும் அவஸ்தை தெரிந்த ஒருவர் இப்பொழுது அரசுத் தலைவராக இருக்கிறார். எனவே அவர் இந்த விடயத்தில் உடனடியாகக் கை வைக்கலாம். வசதியான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், தனி வாகனங்களில் பயணம் செய்கிறவர்கள் விரும்பிய, சுகாதாரமான, வசதியான இடத்தில் நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். குறைந்தது காட்டுப்பகுதிகளிலாவது வாகனத்தை நிறுத்திச் சிறுநீர் கழிக்கலாம். தென்னிலங்கை நகரங்களில் வளமான ரெஸ்டாரன்களில் சுகாதார வசதிகள் கூடிய கழிப்பறைகள் உண்டு. ஆனால் பொதுப் போக்குவரத்து வாகனங்களைப் பயன்படுத்தும் பெண்களுக்குத்தான் இந்தத் தண்டனை.

நாட்டின் பெண்கள் நீண்ட தூரப் பயணங்களில் சிறுநீரை அடக்கிக் கொண்டு பயணம் செய்கிறார்கள் அல்லது சிறுநீர் கழிப்பதை தவிர்ப்பதற்காக நீர் அருந்தாமல் சிறுநீர் பையை பழுதாக்குகிறார்கள் என்பது நாட்டின் வாழ்க்கை தரத்தை காட்டும் ஒரு குறிகாட்டி. சுகாதாரம், பால் சமத்துவம், பாதுகாப்பான பயணம் போன்ற பல்வேறு நோக்கு நிலைகளில் இருந்தும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விடயம்.

ஒரு நாட்டின் பொதுச் சுகாதாரக் குறிகாட்டிகளில் ஒன்று பொதுக் கழிப்பறையாகும். மேற்கத்திய பண்பாட்டில் பொதுக் கழிப்பறைகள் பெரியவைகளாகவும் சுத்தமானவர்களாகவும் இருக்கும். அவற்றைத் தொடர்ச்சியாகப் பராமரிப்பார்கள். அவை பெருமளவுக்கு உலர் கழிப்பறைகள்தான். ஆனாலும் அவற்றை தொடர்ச்சியாகச் சுத்தமாகப் பேணும் ஒரு பண்பாடு அங்கு வளர்ந்திருக்கிறது. கழிப்பறைகளைப் பராமரிப்பது மட்டுமல்ல பொதுமக்கள் கழிப்பறைகளை பொறுப்போடு சுத்தமாக சுகாதாரமாகப் பயன்படுத்துவதும் ஒரு பண்பாடுதான். அந்தப் பண்பாடு அங்கே வளர்ந்திருக்கிறது. அது அந்த சமூகங்களின் சமூகத் தராதரத்தை; விழுமியங்களை, கூட்டுப் பொறுப்புணர்ச்சியை வெளிக்காட்டும் விடயங்களில் ஒன்று. ஆனால் ஆசிய ஆபிரிக்க நாடுகளில் நிலைமை அவ்வாறு இல்லை. பொதுக் கழிப்பறை என்றாலே அசுத்தமானது, அடிவருப்பானது, துர் வாடை வீசுவது, இலையான் மொய்ப்பது என்று நிலைமைதான் பொதுப் போக்காக உள்ளது.

மேட்டுக்குடி அரசியல் பாரம்பரியத்தில் வராத அனுர இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியது வரவேற்கத்தக்கது. அதேசமயம் அவர் கூறுவதுபோல நெடுந்தூரப் பயணங்களில் தமிழ் நோக்கு நிலையில், இது ஒன்று மட்டும்தான் விவகாரம் இல்லை என்று வாகன உரிமையாளர்களும் சாரதிகளும் முறைப்பாடு செய்கிறார்கள். நீண்ட தூரப் பயணங்களில் குறிப்பாக இரவு வேளைகளில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையிலான பயண வழியில் தமது வாகனங்கள் அடிக்கடி பொலிசாரால் மறிக்கப்படுவதாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள். அவ்வாறு மறிக்கப்பட்டு மினக்கெடுத்தப்படுவதை விடவும் அவர்கள் கேட்கும் காசைக் கொடுத்துவிட்டு ஓடித் தப்புவதுதான் புத்திசாலித்தனமானது என்று பல சாரதிகள் கருதுவதாக ஒரு பொதுவான அபிப்பிராயம் உண்டு.

இந்த நடைமுறை தமிழர்களுடைய பயண வழிகளில்தான் அதிகமாக உண்டு என்றும் தென்னிலகையில் ஏனைய நெடுந்தூரப் பயண வழிகளில் இந்தளவுக்குச் சோதனைகள் இல்லை என்றும் ஓர் ஒப்பீடு உண்டு. போர்க் காலங்களில் தமிழ் மக்கள் அதனை தமக்கு எதிரான கூட்டுத் தண்டனையின் ஒரு பகுதியாக விளங்கி வைத்திருந்தார்கள். ஆனால் கடந்த 15 ஆண்டுகளாகவும் அந்தத் தண்டனை தொடர்கிறதா? அப்படியென்றால் அதை உடனடியாக நிறுத்த வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. ஏனென்றால் நிறைவேற்று அதிகாரமுடைய அரசுத் தலைவரால் தமிழ்ச் சாரதிகளும் வாகன உரிமையாளர்களும் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் உண்மையானவையா இல்லையா என்பதனை விசாரித்து அறிவது கடினமானது அல்ல.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்ட ஒரு அரசாங்கமும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட ஓர் அரசுத் தலைவரும் நினைத்தால் முடிவுக்கு கொண்டு வரக்கூடிய விடையங்கள் இவை.

அரசியல், பொருளாதாரத் தளங்களில் அரசாங்கத்துக்கு வரையறைகள் உண்டு. வெளி நிர்பந்தங்கள் இருக்கலாம். ஆனால் பொதுக் கழிப்பறைகள் சுகாதாரமாகப் பேணப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதற்கும் பொது போக்குவரத்து வாகனங்கள் குறிப்பாக தமிழ் வாகனங்கள் போலீசாரால் அதிகம் மறைக்கப்படுகின்றனவா என்பதனை விசாரிப்பதற்கும் அரசாங்கத்தால் முடியும். உடனடியாக முடியும். ஸ்ரீலங்காவை கிளீன் பண்ணக்கூடிய சாத்தியமான இடங்கள் இவை. அரசாங்கம் அதைச் செய்யுமா?

கடந்த தைப் பிறப்பிலன்று வன்னியிலிருந்து ஒரு குடும்பம் வாகனத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தது. முன்னிரவு வேளை. கும்மிருட்டுக்குள் நின்று போலீசார் மறித்தார்கள். அங்கே தெருவிளக்குகள் இருக்கவில்லை. போலீசாரிடம் டோர்ச் லைட்கள் இருக்கவில்லை. பதிலாக கைபேசி டோர்ச் லைட்டுகளைப் பயன்படுத்தினார்கள். வாகனத்தின் இலக்கத்தையும் ஏனைய விபரங்களையும் பதிய வேண்டும் என்று கூறி சாரதியை இறக்கிக் கொண்டு போனார்கள். கைபேசியின் டோர்ச் லைட் வெளிச்சத்தில் பதிந்தார்கள். அப்பொழுது சாரதி கேட்டார், ஏன் உங்களிடம் டோர்ச் லைட் இல்லையா? இந்தக் கைபேசி டோர்ச் லைட்டை வைத்துக் கொண்டு கள்ளர்களை எப்படிப் பிடிப்பீர்கள்?” என்று. அதற்கு ஒரு போலீஸ்காரர் தமிழில் சொன்னார் “சுட்டுப் பிடிப்போம்” என்று. இந்த மாற்றத்துக்குத்தான் தமிழ் மக்கள் வாக்களித்தார்களா?

# Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)


டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**

11/24




---

EXPERIENCE BRAMPTON

Mayor Brown & Councillors invite you to

# Celebrate Tamil Heritage Month







Saturday, January 25

**Ken Whillans Square & City Hall Atrium**

| | |
|---|---|
| 2 pm | **Community Flag Raising** |
| 2:15 pm | **Reception** |

Enjoy musical and dance performances and free traditional cuisine as we celebrate Tamil Heritage Month, in partnership with the Brampton Tamil Association and Brampton Tamil Seniors Association.

*Generously sponsored by* Algoma University

**brampton.ca**/events

BRAMPTON

---

NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.

THAT'S LIKE PAYING

**$69** WEEKLY | AT | **4.99%** APR FOR 39 MONTHS O.A.C.

PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO

**$500** IN LOYALTY BONUS

OFFER ENDS JANUARY 2ND, 2025.

NISSAN



WINTER **READY** EVENT




**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

**905.477.3337 647.631.9054**
**saj@villagenissan.com**

NISSAN | VILLAGE NISSAN

**25 South Unionville Ave, Unionville, ON L3R 6B8**
**www.villagenissan.com**



# AQUA WELLNESS CENTRE LIMITED

REHABILITATION CLINIC

# INJURED?

## CALL US TODAY
## OVER 15 YEARS OF EXPERIENCE IN PERSONAL INJURY.

- EXTENDED HEALTH CARE ( DIRECT BILLING )

- WSIB
- SLIP & FALL
- PRIVATE CLIENTS
- SPORTS INJURY
- MOTOR VEHICLE ACCIDENT





KENEDY AND SHEPPARD AVE. E
OFF KENNEDY ROAD.

AQUA WELLNESS CENTRE LTD.
100 COWDRAY COURT SUIT 140
TORONTO, ON. M1S 5C8

T: 416-463-9090 C: 647-972-7126
F: 416-363-9090


Plan
Design
Build
Paramount
Custom Homes Ltd.
Quality comes first
Build your Dream Home With Us
RESIDENTIAL / COMMERCIAL CONSTRUCTION
ARCHITECTURAL DRAWINGS
OBTAINING BUILDING PERMITS
REZONING
LAND SEVERANCE
FINANCING FOR CONSTRUCTION
EXPERIENCE - 10 + YEARS
Check out our showroom at 2400 MIDLAND AVE. UNIT 106
TORONTO, ON. M1S 5C1
416-335-5885
TARION CERTIFIED BUILDER
REGISTERED BUILDER
TARION
TARION WARRANTY CORPORATION

## மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி குரு மன்றத்தில் சிறப்பு பூசைகள்



ஸ்காபரோவில் அமைந்திருக்கும் ஆதிபராசக்தி குருமன்றத்தில் 13-1-2025 திங்கட்கிழமை காலை பருவபூசை சிறப்பாக நடைபெறும்.

14-01-2025 செவ்வாய்க்கிழமை காலை 8:30 தொடக்கம் பொங்கல்விழா சிறப்பாக பூசை நடைபெறவுள்ளது.

28-01-2025 தை அமாவாசை காலை நடைபெறும் என்பதை சக்திகள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

அனைத்து சக்திகளையும் அன்னையின் அருளைப்பெறும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றனர்.
மகேஸ்வரபூசையும் நடைபெறும்.

80E நாஸ்டீன் வீதி ஸ்காபரோ கனடா
தொடர்புகளுக்கு: 647-436-9647


## மரண அறிவித்தல்

மலர்வு 05-03-1928 உதிர்வு 13-01-2025

யாழ்ப்பாணம் சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, தாவடி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு மகேந்திரராஜா அவர்கள் 13-01-2025 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடேசு - தையல்நாயகி தம்பதிகளின் பாசமிகு புதல்வனும்,
காலஞ்சென்றவர்களான சின்னராசா - ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகனும்,
காலஞ்சென்ற கண்மணி அவர்களின் அன்புக் கணவரும்,
காலஞ்சென்றவர்களான, மகாதேவன், மகாலட்சுமி, மனோகரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும், பரமேஸ்வரி மற்றும் காலஞ்சென்ற யோகானந்தம், மனோகரி, இராசரத்தினம், நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும்,
தமயந்தி (கனடா), சுகந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும்,
யோகநாதன் (கனடா), தயாசீலன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும்,
கோகுலன், டொமினிகா, கீர்த்திகன், செண்பகா, கரணியா, கிர்ஷிகன், கேசிகன், சுருதி ஆகியோரின் பட்சமுள்ள பேரனும்,
கைலஷின் பட்சமுள்ள பூட்டனுமாவார்.
அன்னாரின் பூதவுடல் 19-01-2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 5:00 மணி முதல் 8:00 மணிவரை 4164 Sheppard Avenue East Scarborough (Sheppard & Midland) அமைந்துள்ள Ogden Funeral Home ல் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் 20-01-2025 திங்கட்கிழமை காலை 11:30 மணி தொடக்கம் கிரியைகள் நடைபெற்று தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.



**அமரர். நடேசு மகேந்திரராஜா**
**(சுதுமலை வடக்கு)**

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: 905-201-7060

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வடக்கு மாகாணத்தில் காலநிலையை கருத்தில் கொண்டு விவசாயிகள் அறுவடையில் ஈடுபடவேண்டும் என ஆளுநர் வேதநாயகன் அறிவுறுத்துள்ளார்

பு. கஜிந்தன்

வடக்கு மாகாணத்தில் நெல்லை அறுவடை செய்யக்கூடிய விவசாயிகள் காலநிலை எதிர்வுகூறலை கருத்திலெடுத்து அறுவடைசெய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அறிவுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாக தொடரும் சீரற்ற காலநிலை தொடர்பாக அவசர கலந்துரையாடல் இணையவழியில் 15ம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது. வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்திலிருந்து ஆளுநர் மற்றும் பிரதம செயலர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்துகொண்டனர்.

விவசாயிகள் நெல் அறுவடை காலத்தில் திடீரென ஏற்பட்ட மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குளங்கள் வான்பாய்வதாக மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக்குளத்துக்கான நீர்வரத்து அதிகமாக உள்ளபோதும் குறைந்தளவான நீரே திறந்துவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலர் சு.முரளிதரன் சுட்டிக்காட்டினார். இதேவேளை மாவட்டத்தின் சில பகுதிகளில் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மன்னார் மாவட்டத்திலும் சில வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன எனவும் கலந்துரையாடலின்போது மாவட்ட இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் சிறிய நீர்பாசனக் குளங்கள் இரண்டு உடைப்பெடுத்துள்ளதாக இடர்முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.



வடக்கு மாகாண நீர்பாசனத் திணைக்களத்துக்குச் சொந்தமான குளங்களில் 47 குளங்கள் தற்போது வான்பாய்ந்து கொண்டிருப்பதாக மாகாண நீர்பாசனத் திணைக்களப் பணிப்பாளர் ஆளுநருக்கு தெரியப்படுத்தினார்.

தற்போதைய நிலையில் மழை வீழ்ச்சி குறைந்து வருவதாகவும் குளங்களுக்கான நீர் வரத்து குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டதுடன் அதற்கு அமைவாக இன்று மாலையிலிருந்து படிப்படியாக வான்கதவுகள் மூடப்படும் என்றும் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தொடர்ச்சியாக மழையுடனான காலநிலை எதிர்வுகூறப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன்னதாக நெல்லை அறுவடை செய்யக் கூடிய விவசாயிகள் அதனை அறுவடை செய்வதில் கூடுதல் கவனம் செலுத்துவதன் ஊடாக அழிவுகளைக் குறைக்க முடியும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் கலந்துரையாடலில் துறைசார் அதிகாரிகள் இணையவழியில் கலந்துகொண்டனர்.

# உயிரைக்காக்கும் பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள் வடக்கு மாகாண ஆளுநர் புகழாரம்!

இன்றும் சில மருத்துவர்களை மக்கள் கடவுள்களாகவே பார்க்கின்றனர். ஒரு சில மருத்துவர்களின் செயற்பாடுகளால் மக்களின் அந்த எண்ணங்களில் மாற்றம் ஏற்படுகின்றது. உயிரைக்காக்கும் பணியில் ஈடுபடும் மருத்துவர்கள் கடவுளுக்கு நிகரானவர்கள் என்பதை மனதிலிருந்து சேவையாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சின் மீளாய்வுக் கூட்டம் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் 16ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தில் அண்மையில் பரவிய எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதில் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் செயற்பாடு சிறப்பாக அமைந்ததாக வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் தாதிய உத்தியோகத்தர்களின் நிலுவைக் கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன எனவும் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் முன்னேற்றங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. நடப்பு ஆண்டுக்குரிய திட்டங்கள் அனைத்தையும் இந்த மாதத்துக்குள் தயாரித்து முடிக்குமாறு அறிவுறுத்திய ஆளுநர், ஒக்ரோபர் மாதத்துக்குள் அவை செய்து முடிக்கப்பட வேண்டும் என்றும் கண்டிப்பாகக் குறிப்பிட்டார்.

சுகாதரத் திணைக்களத்தின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி. வி.பி.எஸ்.டி.பத்திரண, வடக்கில் முழு இயங்கு நிலையில் செயற்படாத மாங்குளம், கிளிநொச்சி, பருத்தித்துறை மருத்துவமனைகளில் வெளிநாட்டு நிதியுதவியில் அமைக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை நிலையங்களை விரைவில் இயக்குவதற்கு ஏதுவான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டது. அதனை உடனடியாகச் செயற்படுத்துவதற்கான சாதகமான நிலைமைகள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் பணித்ததுடன், விரைவில் இது தொடர்பான கலந்துரையாடலை ஏற்பாடு செய்யுமாறும் பணித்தார்.



நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு திணைக்கள ஆணையாளர் திருமதி. சுஜீவா சிவதாஸ், சான்றுபெற்ற பாடசாலை மற்றும் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான கல்வி வசதியை உறுதிப்படுத்துவதற்கான கோரிக்கையை முன்வைத்தார். அதனை உடனடியாகச் செயற்படுத்துமாறு ஆளுநர் அறிவுறுத்தல் வழங்கினார்.

மேலும் நியதிச் சட்ட ஏற்பாடுகள் போதியளவு இல்லாமையால் கொள்கை ஆவணத்துக்கான அனுமதிக்கான கோரிக்கையையும் அவர் ஆளுநரிடம் முன்வைத்தார்.

இதேவேளை சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் வைத்திய கலாநிதி தில்லையம்பலம் சர்வானந்தன், ஆயுள்வேத மருத்துவமனைகளின் தேவைப்பாடுகள் தொர்பில் சுட்டிக்காட்டினார். அத்துடன் சுற்றுலாவிகளை இலக்கு வைக்கும் வகையில் சுதேச மருத்துவத் திணைக்களத்தின் செயற்பாடுகள் அமையவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இருக்கின்ற மருத்துவ வசதிகளை ஒழுங்குபடுத்தும் வகையில் வேலணை மருத்துவமனை மற்றும் ஊர்காவற்றுறை மருத்துவமனை என்பனவற்றை ஒருங்கிணைந்து செயற்படுத்துவது தொடர்பான யோசனை சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளரால் முன்வைக்கப்பட்டது. முன்னோடித் திட்டமாக இதனைச் செயற்படுத்துவதற்கு முன்னதாக சம்பந்தப்பட்ட சகல தரப்பினருடனும் கலந்துரையாடுமாறு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

# பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை நடாத்தும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடன் கலந்துரையாடல்



பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவை நடாத்தும் இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தி உரிமையாளர்களுடான கலந்துரையாடலானது அரசாங்க அதிபர் திரு. மருதலிங்கம் பிரதீபன் அவர்களின் தலைமையில் 16ம் திகதி வியாழக்கிழமை அன்றைய தினம் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்துச் சேவைகளில் ஏற்படும் தடங்கல்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

1. கொழும்புத்துறையிலிருந்து யாழ்ப்பாண நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் சிற்றூர்தியின் நேர ஒழுங்குகள் சீர் செய்யப்பட்டது.

2. மருதங்கேணி கட்டைக்காட்டிலிருந்து உடுத்துறைக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்து சபையின் பேரூந்துச் சேவை மற்றும் உசன் கெற்பெலி பகுதிகளிலிருந்து சாவகச்சேரி நகருக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கான இலங்கைப் போக்குவரத்து சபையின் பேரூந்துச் சேவைகள் தொடர்பாக பாடசாலை மாணவர்களின் பாடசாலை நேரத்திற்கு அமைவாக நேர ஒழுங்குகள் சீர்செய்யப்பட்டுள்ளது.

3. அச்சுவேலி இராசபாதை ஊடாக யாழ்ப்பாண நகருக்கு வரும் இலங்கை போக்குவரத்துச் சபையின் பேரூந்தில் பாடசாலை மாணவர்களுக்கான இடையூறு ஏற்படாதவகையில் பேரூந்து சேவை நடைபெறுவதனை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களைக் கொண்டு உறுதிசெய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கலந்துரையாடலில் உதவி மாவட்டச் செயலாளர், இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர் மற்றும் சாலை முகாமையாளர், தனியார் சிற்றூர்தியின் சங்கத் தலைவர் மற்றும் உரிமையாளர்கள், சிறுவர் மேம்பாட்டு மாவட்ட இணைப்பாளர் மற்றும் பிரதேச செயலக சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



Hindu Parliament & Sanatana Hindu Sangha
Presents

# KUMBH MELA NORTH AMERICA 2025

Come join the biggest celebration of Hinduism!

GRAND
SHAHI SNAN
SUNDAY FEB 2nd

Don Knabe Park
Cerritos, CA (USA)
(near the basketball courts)





Other Snan Dates & Locations

Jan 13th
Jan 14th
Jan 28th
Feb 11th
Feb 25th

KAILASA TORONTO
*1960 Ellesmere Rd Unit 10, Scarborough, ON*

Learn more: usakumbhamela.net
Call (416) 439-2089 Email contact@nithyananda.ca

Organized with Hindu Temples of North America



# அநுர அரசும் தமிழர் பகையும்

***“அநுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான தமிழர்தேசத்தின் குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட முடியாதவை. எனினும் “ஈழத் தமிழர் அரசியலுக்காக எந்தப் பிசாசுடன் பேசுவதற்கும் தயார்” என அறிவித்து “நரி” என விடுதலைப்புலிகளினால் அழைக்கப்பட்ட ரணில், தமிழினப் படுகொலையாளிகளான கோத்தபாய-மஹிந்த அரசுகளுடன் பேசிய தமிழ்தேசிய தரப்பினர் அநுர தரப்பை ரணில் - ராஜபக்ஸக்களைவிடவும் இனவாதிகளாக காட்ட முற்படுகின்றனர்.”***

**------------------------------------------------------------ - கே. பாலா ----**

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசமைத்துள்ள நிலையில் இந்த அரசுடனாவது தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்களை பேசி தீர்வொன்றை காணவேண்டிய தார்மீக பொறுப்பிலுள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் “பொறுப்புத் துறந்தவர்”களாக அண்மைக்காலமாக முன்னெடுத்து வரும் சுயநல, போட்டி, பொறாமை அரசியல் கலாசாரத்தினால் அநுரகுமார அரசில் கிடைத்துள்ள தமிழர் தீர்வுக்கான வாய்ப்பும் கை நழுவிப்போகும் துரதிர்ஷ்ட நிலைமையே ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான “தமிழர்களின் விடுதலைப் போராட்டத்த்திற்கு எதிரான செயற்பாடுகள், இனவாதசிந்தனைகள்” என்றகடந்த கால குற்றச்சாட்டுக்கள் தமிழர் தரப்பால் தற்போதும் முன்வைக்கப்பட்டு வந்தாலும் அவர்கள் ஆட்சி அமைந்துள்ள நிலையில் அவர்களுடன் தமிழர் தரப்புக்கள் தமிழ் மக்களின் உரிமை சார் விடயங்களை பேசித்தான் ஆக வேண்டும்.

நோர்வே மத்தியஸ்தத்துடனான விடுதலைப்புலிகளுடனான சமாதான பேச்சு வார்த்தையை முறியடித்து மீண்டும் போரை ஆரம்பிக்கத் தூண்டியவர்கள், தமிழர்களுக்கு எதிரான போரை நடத்த இராணுவத்திற்கு 50000 பேரை இணைத்துக் கொடுத்தவர்கள், சந்திரிகா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சுனாமி பொதுக்கட்டமைப்பை சிதைத்தவர்கள், தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கு இணைப்பை உயர்நீதிமன்றத்தின் ஊடாக பிரித்து தமிழர் தாயகத்தை துண்டாடியவர்கள் என்று அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான தமிழர்தேசத்தின் குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட முடியாதவை. அதில் மாற்றுக்கருத்துக்கள் கிடையாது.

ஆனால் அவர்கள் இப்போது மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கொண்ட, தற்போதைய இலங்கை அரசியல் சூழலில் அசைக்க முடியாத அரசாங்கம். இன்னும் 5 வருடங்களுக்கு அவர்களின் ஆட்சிதான். கோத்தபாயவும் பெரும்பான்மைபலத்துடன் ஆட்சியமைத்தவர். அவரின் ஆட்சிக்கு நடந்தது அநுரவின் ஆட்சிக்கும் நடக்குமென சிலர் வாதிடலாம். ஆனால் கோத்தபாயவின் ஆட்சியை அகற்ற பெரும்பங்காற்றியவர்கள்தான் தற்போது ஆட்சியமைத்திருப்பதால் கோத்தபாயாவுக்கெதிராக வெடித்துக்கிளம்பியதைப் போன்றதொரு மக்கள் புரட்சியை அநுரகுமார அரசுக்கு எதிராக தற்போதைக்கு எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் தற்போது நாட்டில் பலமானதொரு எதிர்க்கட்சி கிடையாது. உதிரிகளாக இருக்கும் ஏனைய கட்சிகளுக்கும் மக்களை அணிதிரட்டும் பலமும் கிடையாது.

ஆகவே தமிழ் தேசியக் கட்சிகள் ,தரப்புக்கள் விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்களின் உரிமைசார் விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுரகுமார தலைமைமையிலான அரசுடன் பேசித்தான் ஆக வேண்டும். தமிழர் போராட்டத்தை அழிக்க நான் எந்த பிசாசுடனும் கை கோர்ப்பேன் என 80 களில் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறியிருந்தார். இதனைத்தான் தமிழர்களின் விடுதலைப்போராட்டத்தை இனப்படுகொலையுடன் முடிவுக்கு கொண்டுவந்த கோத்தா-மஹிந்த ஆட்சியில் அவர்களுடன் தமிழ் தேசியக்கூட்டமைப்பாக தமிழர் உரிமைசார விடயங்கள் தொடர்பான பேச்சுக்கு சென்ற தமிழ்த்தேசிய எம்.பி.க்கள் கொஞ்சம் மாற்றி “ஈழத் தமிழர் அரசியலுக்காக எந்தப் பிசாசுடன் பேசுவதற்கும் நாங்கள் தயார்” என அறிவித்திருந்தனர்.

அதுமட்டுமன்றி சமாதானப்பேச்சுக்கள் என்ற பெயரில் விடுதலைப்புலிகளை பலவீனமாக்கி. .சர்வதேசத்தை தமிழர் விடுதலைப்போராட்டத்துக்கு எதிராகத் திருப்பி புலிகள் மீது சர்வதேச தடைகளை விதித்து, கருணா அம்மானை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரித்து, வடக்கு, கிழக்கு பிரதேச வாதத்தை உருவாக்கிய, “நரி” என விடுதலைப்புலிகளினாலே அழைக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை இன்றும் தர்மதேவனாக, சாமாதானத் தூதுவனாக, தமிழர் பிரச்சினைக்கு தீர்வு தரும் தலைவனாக நம்பும் தமிழ் தேசிய அரசியல்வாதிகள், தமிழ் தேசிய தரப்புக்கள் அநுரகுமார தரப்பினரை நம்ப மறுப்பது, அவர்களுடன் பேச்சு நடத்துவது வீண் வேலையெனக் கூறுவதுதான் வேடிக்கை.

அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அதன் தாய்க்கட்சியான மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) ஆகியவற்றின் மீதான தமிழர்தேசத்தின் குற்றச்சாட்டுக்களை விடவும் படு மோசமான இனப்படுகொலைகள், போர்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள். நில ஆக்கிரமிப்புக்கள், பௌத்த மயமாக்கல்கள், சிங்களமயமாக்கல்களை நேரடியாக செய்த கோத்த-மஹிந்த அரசுடன் அப்போது தமிழர் உரிமைகள் தொடர்பாக பேச முடிந்த தமிழ் தேசிய கட்சிகள் இவ்வாறான குற்றங்களுக்கு ஆதரவாக நின்றவர்கள் என்ற குற்றத்தை மட்டும் செய்த தேசிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணியுடன் மட்டும் ஏன் பேச்சு வார்த்தை நடத்தக்கூடாது? தாராளமாக நடத்தலாம். “குளத்துடன் கோபித்துக்கொண்டு நாம்... கழுவாமல் இருந்தால் நாம் தான் நாறுவோம். குளத்துக்கு எந்த நாற்றமும் கிடையாது.

ஆனால் நாம் அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசுடன் தமிழர் உரிமை சார் விடயங்களைப் பேசப் போகும்போது நாமும் பலமானவர்களாக, ஒற்றுமைமிக்கவர்களாக. ஒரே உணர்வு, சிந்தனை, இலக்கு கொண்டவர்களாக இருக்க வேண்டும். எனினும் இந்த பண்புகள் எம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் தேசிய அரசியல்கட்சிகளிடையில் மருந்துக்குக்கூட இல்லையென்பதே இன்றைய தமிழர் அரசியலின் பரிதாபநிலை. தமிழர்களை பலமிக்கவர்களாக பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் தேசியக்கூட்டமைப்பு உடைந்து தமிழரசுக்கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஜனநாயக தமிழரசுக்கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி என பிரிந்து பலவீனமாகியுள்ள நிலையில் இவர்களினால் தனித்தனியாக எதனை சாதித்து விட முடியும்?

தற்போதைய அரச தரப்பு முக்கியஸ்தர்கள் சிலர் தமிழ் கட்சிகள் தனித்தனியே நின்று தீர்வுக்கான கருத்துகளைக் கூறாமல், ஒன்றுபட்டு ஒரே கருத்தைக் கூறுவார்களாக இருந்தால் அது தொடர்பில் பேசலாம் என்றவாறாக கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலையில் தமிழ்த் தேசிய காட்சிகள், தரப்புகள் அவதானமாகவும் ஒன்றுபட்டும் செயற்பட வேண்டியதன் அவசியத்தை தமிழ் தேசிய அரசியல் பரப்பில் உள்ளோர் கண்டிப்பாக புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் புரிந்துகொள்ள மறுப்பதும் புரிந்தும் புரியாததுபோல் நடிப்பதுமென தமிழர் நலன் அரசியலைக் கைவிட்டு தமது நலன் அரசியலை முன்னெடுக்கும் நகர்வுகளே உத்வேகம் பெற்றுள்ளன.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான அரசுடன் பேச்சு நடத்துவதற்கு தமிழ் தேசியக்கட்சிகளிடையில் ஒற்றுமை இல்லாதுவிட்டாலும் பரவாயில்லை அநுர அரசினால் தமிழர்களுக்கு ஏற்படப்போகும் சில ஆபத்தான விடயங்களை குறிப்பாக புதிய அரசியலமைப்பு உருவாக்கத்தை எதிர்ப்பதற்காகவேனும் தமிழ் தேசியக்கட்சிகளிடையில் ஒற்றுமை அவசியமாகவுள்ளது. ஆனால் இந்த அவசியத்தை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். இலங்கை தமிழரசுக்கட்சியை சேர்ந்த சிவஞானம் சிறீதரன் ஆகியோரைத் தவிர வேறு எவருமே உணர்ந்துள்ளதாகத் தெரியவில்லை.

ஏனெனில் அநுரகுமார அரசினால் தமிழர்களுக்கு எதிராக உருவாக்கப்படவுள்ள புதிய அரசியலமைப்பு பாராளுமன்றத்தின் அனுமதிக்கு வரும் போது அது விடயத்தில் தமிழ் தேசியமாக முடிவுகளை எடுத்து எதிர்ப்புக்களை வெளியிட தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பி.யுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்கு விடுத்த அழைப்பை தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட எம்.பி.யான சிறீதரனும் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டணியின் வன்னி மாவட்ட எம்.பி. யான செல்வம் அடைக்கலநாதனும் மட்டுமே ஏற்று இரு சந்திப்புகளை நடத்தியுள்ள நிலையில் அந்த முயற்சியை முறியடிக்க தமிழரசுக்கட்சியின் பேச்சாளர் சுமந்திரனும் அவரது கையாள் சாணக்கியன் எம்.பி.யும் முழுமூச்சில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த விடயத்தில் தமிழ் தேசிய அரசியல் கட்சிகளை ஒன்றிணைத்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமைத்துவத்தை ஏற்க முயற்சிக்கின்றார். அவர் ஒரு எம்.பி.யைக்கொண்ட கட்சியை சேர்ந்தவர். நாங்கள் 8 எம்.பி.க்களைக் கொண்ட கட்சியினர்.நாம் எவ்வாறு அவரின் தலைமைத்துவத்தின் கீழ் இருப்பது? எனவே இந்த முயற்சிக்கு ஒத்துழைக்க முடியாதென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதியின் அமைப்பாளராக இருந்தவரும் 2015 பாராளுமன்றத் தேர்தலில் ராஜபக்ஸக்களின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டுத் தோல்வியடைந்தவரும் அதன்பின்னர் தமிழரசுக்கட்சிக்கு பின்கதவால் வந்து எம்.பி.யானவருமான இரா.சாணக்கியன் மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட்டு பாராளுமன்றக்குழுகூட்டங்களில் தமிழரசுக்கட்சியினரைக் குழப்பி வருகின்றார். இவரை அக்கூட்டத்தில் பங்கேற்க முடியாத சுமந்திரன் இயக்கி வருகின்றார்.

தலைமைப்பதவி எனக்கு தேவையில்லை. நீங்கள் விரும்பும் எவரையாவது தலைமைப்பதவிக்கு போட்டுக்கொள்ளுங்கள். ஆனால் இந்த முயற்சியை தோற்கடித்து விடாதீர்கள் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தமிழரசுக்கட்சியினருக்கு பகிரங்கமாக அறிவித்தும் சுமந்திரன், சாணக்கியனின் சகுனித்தனம் தொடர்கின்றது. கஜேந்திரகுமாரின் முயற்சிக்கு ஆதரவளிப்பதாகக் கூறும் செல்வம் அடைக்கலநாதன் பாம்புக்கு வாலையும் மீனுக்கு தலையையும் காட்டும் ஒரு விலாங்கு மீன். அண்மைய தமிழக விஜயத்தின் போது இவர் சுமந்திரன், சாணக்கியனுடன் இணைந்து “செல்பிபிள்ளை”யாக படங்களுக்கு அவர்களுடன் போஸ் கொண்டிருந்ததையும் அவர்களுடனேயே ஒன்றாக திரிந்ததையும் அவதானிக்க முடிந்தது. அவரை இவ்விடயத்தில் கஜேந்திரகுமாரோ சிறீதரனோ நம்புவது நல்லதல்ல.

எனினும் தமிழ் தேசிய அரசியலை பலப்படுத்த, தமிழர் சார் உரிமை விடயங்களை ஒரே குரலில் வெளிப்படுத்த தமிழ் தேசியக்கட்சிகள் பகைமையை, நீயா நானா போட்டியை, கழுத்தறுப்பு அரசியலை தற்காலிகமாகவேனும் மறந்து ஒற்றுமைப்படவேண்டியது அவசியம். “ஈழத் தமிழர் அரசியலுக்காக எந்தப் பிசாசுடன் பேசுவதற்கும் நாங்கள் தயார்” என் அறிவித்தவர்கள் ஈழத் தமிழர் அரசியலுக்காக “தமக்குள் குடிகொண்டிருக்கும் பேய்”களையும் விரட்டத் தயாராக வேண்டும்.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் வானொலி ஒலிபரப்புத் தளத்தில் தொடர்ச்சியாக கலையகத்தில் தனியொருவராக 30 மணி நேரம், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய "யுகம்" வானொலி அறிவிப்பாளர் சதீஸ் நடராஜா

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்**

இலங்கைத் தீவின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் மக்கள் அனுபவித்த தென்னிலங்கை ஆட்சியாளர்களின் அடக்குமுறை, அந்த அடக்கு முறைகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த தமிழ் இளைஞர் குறி வைத்து தாக்குதல்களையும் கொலைகளையும் நடத்திய இலங்கை அரசின் ஏவல் நாய்களான இராணுவத்தினரின் அச்சுறுத்தல். இவை எளிதில் மறந்து விட முடியாதவை.

இவை போன்ற காரணங்களில் அந்த மாங்கனித்தீவை விட்டு நீங்கி அகதிகளாக பல நாடுகளை நோக்கி படையெடுத்த இலட்சக்கணக்கானவர்களில் கனடா என்னும் அற்புதமான தேசத்தில் அகதிகளாக "கைகளை உயர்த்திக் கொண்டு" குடிவரவு அதிகாரிகளிடம் மன்றாடியவர்கள் இன்று இந்த தேசத்தில் எத்தனையோ உயரங்களைத் தொட்டவர்களாக விளங்குகின்றார்கள்.

அரச பதவிகளிலும் மத்திய மாகாண மற்றும் உள்ளாட்சி அரசுகளில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற மக்களி பிரதிநிதிகளாக அத்துடன் பல துறைகளில் பிரகாசிக்கின்றவர்களாக எமது தமிழ் மக்கள் இங்கு திகழ்கின்றார்கள்.

இவ்வாறு எமது தமிழ் மக்கள் சுதந்திரமாக இயங்கும் துறைகளில் கனடாவில் முக்கியமான ஒரு தளமாக விளங்குகின்ற ஊடகத்துறையில் எமது தமிழர்கள் "கொடி கட்டி" பறக்கின்றார்கள் என்றால். அது மிகையானது ஒன்றல்ல.

ஆமாம்! நாம் விசேடமாகக் குறிப்பிட்ட ஊடகம் என்னும் தளத்தில் வானொலி ஒலிபரப்புத் துறை என்னும் பிரிவில் எம்மவர்கள் இன்று "ஒளி வீசும்" ஒலிபரப்பாளர்களாக விளங்குகின்றார்கள் என்பதை இங்கு பதிவு செய்யும் போது, .அச்சு ஊடகம் ஒன்றில் தொடர்ச்சியாக 30 வருடங்களாக பயணிக்கும் எமக்கும் பெருமையாகவே உள்ளது.




அவர்களிடமிடம் எனதும் எனது மனைவி மற்றும் பிள்ளைகளின் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

அவரும் இதற்கு சம்மதம் தெரிவித்து குறிப்பிட்ட திகதிகளில் எனது சாதனை முயற்சியை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தை எனக்களித்தார்.

இதனால் நான் இன்று ஒரு கனடாவில் ஒரு வானொலித்துறை சாதனையாளனாக தலை நிமிர்ந்த நிற்கின்றேன் என்றார் சதீஸ் நடராஜா.

அவருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்த வண்ணம் தாங்கள் இந்த வானொலித்துறை சாதனையை நிலை நாட்ட முயன்ற போது வானொலி நிலையத்தின் கலைக் கூடத்தில் யார் தங்களோடு கூட இருந்தார்கள் என்று கேட்ட போது சாதனையாளர் சதீஸ் நடராஜா அவர்கள் தனது துணைவியார் ஒருவர் மாத்திரமே என்னோடு அந்த 30 மணி நேரமும் அருகில் இருந்தார் என்று உற்சாகத்துடன் தெரிவித்தார்.





அப்போது தான் நாம் உணர்ந்தோம். நமது குடும்பத்தை விட சிறப்பாக உதவிடக் கூடியவர்கள் வேறு ஒருவரும் இல்லை என்பதே இல்லை என்று.

எமது நேர்காணலை நாம் நிறைவிற்கு கொண்டு வரும் வேளையில் சாதனையாளர் சதீஸ் நடராஜா இன்னுமொரு சாதனை தொடர்பான விடயத்தையும் எம்மோடு பகிர்ந்து கொண்டார்.

"இந்த வருடத்தின் நிறைவிற்கு முன்னர் நான் 50 மணித்தியால தொடர் வானொலி அறிவிப்பு நிகழ்ச்சியை நான் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று எனது துணைவியாரும் பிள்ளைகளும் விரும்புகின்றார்கள்" என்று.

நாமும் அதற்கு எமது ஆதரவு உண்டு என்று கைச் சமிக்கையால் தெரிவித்துவிட்டு விடைபெறுகின்றோம்.

ஆமாம்! கனடாவில் வானொலி ஒலிபரப்புத்துறையில் புகுந்து. தொடர்ச்சியாக அந்தத் துறையில் தக்கவைத்துக் கொண்டு தங்கள் பயணத்தைத் தொடரும் நூற்றுக்கணக்கானவர்களை நாம் நன்கு அறிவோம். அவர்களோடு நட்பு கொண்டாடி வருகின்றோம்.

அந்த வகையில் நமக்கு கிடைத்த தகவல்களின்படி. கனடிய வானொலி ஒலிபரப்புத்துறையில் முதற் தடவையாக தொடர்ச்சியாக 30 மணித்தியாலங்கள் வானொலி கலையகம் ஒன்றில் தனியொருவராக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய "யுகம்" வானொலி அறிவிப்பாளர் சதீஸ் நடராஜா அவர்களின் "வானலைச் சாதனை" பற்றிய விபரங்களை உலகத் தமிழர்களிடத்தில் கொண்டு சென்று சேர்க்கும் நோக்கம் கொண்டதுதான் இந்த விபரங்கள் அடங்கிய கட்டுரை.

கடந்த டிசம்பர் 2024 வெள்ளிக்கிழமை காலை தொடக்கம் 27ம் திகதி சனிக்கிழமை காலை வரை தொடர்ச்சியாக கனடாவில் கலைவேந்தன் கணபதி ரவீந்திரன் மற்றும் பன்முகக் கலைஞர் ரூபி யோகதாசன் ஆகியோரின் நிர்வாகத்தில் இயங்கும் "யுகம்" வானொலி கலையகத்தில் மேற்படி ஒலிபரப்பு சாதனையை நிலை நாட்டிய யுகம் வானொலி நிலையத்தின் அறிவிப்பாளரும் அன்புச் சகோதரருமான சதீஸ் நடராஜா அவர்களின் இந்த சாதனை முயற்சி எவ்வாறு சாத்தியமானது என்பதை நாம் இப்போது பார்ப்போம்.

நாம் முன்னர் குறிப்பிட்ட நமது தாயக மண்ணில் நிலவிய பிரச்சனைகள் காரணமாக கனடாவிற்கு வந்திறங்கிய சதீஸ் நடராஜா அவர்கள் இங்கு எந்த துறைக்குள் புகுந்து கொள்ளலாம் என்பதை தீர்மானிக்கும் முயற்சியில் இருந்தார்.

அப்போது, 1994ம் ஆண்டு தொடக்கம் அவரது மூத்த சகோதரரும் "கீதவாணி" என்னும் வாரத்தில் இரு மணி நேர வானொலி நிலையத்தை நடத்தி வந்தவருமான தற்போதைய ஈஸ்ட் எப் எம் 102.7 வானொலி நிலையத்தின் அதிபர் நடா ராஜ்குமார் அவர்களின் வழிகாட்டலிலும் பயிற்சியிலும் வானொலித்துறைக்குள் கொண்டு செல்லப்பெற்ற ஒரு "செல்லப்பிள்ளையாக" சதீஸ் நடாராஜா விளங்கினார்.

தனது சகோதரரான நடா ராஜ்குமார் அவர்களால் தான் வானொலி நிலையத்தின் கலையகத்தின் ஒலிபரப்பாளருக்கான இருக்கையில் அமர வைக்கப்பெற்றேன் என்பதை இன்று பெருமையோடு எம்மிடம் பகிர்ந்து கொண்ட சதீஸ் நடராஜா அவர்கள், தனியொருவராக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி யுகம் வானொலி நிலையத்தில் தான் நிலை நாட்டிய அந்த 30 மணி நேர தொடர்ச்சியான வானொலி ஒலிபரப்பு பற்றிய புளாங்கிதத்தோடு எம்மைச் சந்தித்தார்.

இந்த சவால்கள் நிறைந்த ஒலிபரப்புத்துறை சாதனையை நிலைநாட்ட உதவிய தங்கள் ஊக்கம் தொடர்ப்பாக எம்மோடு பகிர்ந்து கொள்வீர்களா என்று நாம் அவரிடம் ஒரு வினாவை முன்வைத்தோம்.

அதற்கு நமது ஒலிபரப்புத் துறை சாதனையாளர் சதீஸ் அவர்கள் திறந்த மனதோடு பின்வருமாறு கூறுகின்றார்.

எனது வானொலித்துறை சாதனைகள் மற்றும் வளர்ச்சிக்கு என்றும் உறுதுணையாக விளங்குபவர்கள் எனது துணைவியாரும் எனது இரண்டு புதல்விகளுமே ஆவார்கள். நாங்கள் நான்கு பேரும் தனிப்பட்ட குடும்பப் பயணமாக பயணித்தாலும் எனது வானொலித்துறை சார்ந்த வளர்ச்சி பற்றியே உரையாடுவார்கள்.

ஒரு நாள் நெடுஞ்சாலை 401 இல் பயணித்துக் கொண்டிருந்தபோது எனது துணைவியாரும் பிள்ளைகளும் இவ்வாறான ஒரு சாதனை முயற்சியை ஏன் நீங்கள் மேற்கொள்ளக்கூடாது என்று என்னிடம் முன்வைத்தார்கள்.

சில மணிநேரங்களின் பின்னர் அதற்கு நான் சம்மதித்தேன்.

தொடர்ந்து யுகம் வானொலி நிலையத்தின் அதிபர் கணபதி ரவீந்திரன்



# மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி — இருவர் படுகாயம்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (16-01-2025)

மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு முன்பாக 16ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை காலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

இதன் போது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் படுகாயமடைந்த இரு ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள் மன்னார் நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் வயது-(61) மற்றும் செல்வக்குமார் யூட்வயது-(42) என தெரிய வந்துள்ளது.படுகாயம் அடைந்த ஆனொருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

உயிரிழந்த இருவரும்,காயமடைந்த ஆண் ஒருவரும் வியாழக்கிழமை (16) மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்த போதே மோட்டார் சைக்கிளில் வந்தவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றதாக தெரிய வருகிறது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

மன்னார் நொச்சிக்குளம் பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற இரட்டை படுகொலையை தொடர்ந்து நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் சம்பவங்கள் இடம் பெற்று வந்த நிலையில் இவர்கள் மீதும் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நீதிமன்றத்திற்கு முன் துப்பாக்கிச் சூடு — மன்னார் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்கிறார் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.



- எஸ்.ஆர்.லெம்பேட் (16-01-2025)

மன்னார் நீதிமன்றத்திற்கு முன்னால் 16ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ள இச்சம்பவத்திற்கு மன்னார் பொலிஸார் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில், மன்னார் நீதிமன்றத்திற்கு முன் நடைபெற்ற துப்பாக்கி பிரயோகம் உண்மையிலேயே கண்டிக்கத்தக்க ஒரு விடயமாகவும், காட்டு மிராண்டித்தனமான ஒரு விடயமாகும்.

இந்த மிலேச்சத்தனமான செயலுக்கு மன்னாரில் உள்ள பொலிஸார் முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டும்.

நொச்சிகுளம் மக்கள் தொடர்ந்து பழிவாங்கப்படுகிறார்கள். இன்றும் தொடர்ச்சியாக அந்த நொச்சிகுளம் கிராமத்தின் மக்கள் படிப்படியாக படுகொலை செய்யப்படுகின்ற சூழல் காணப்படுகிறது.

இந்த விடயத்தை கடந்த அரசாங்கத்தில் மக்கள் பாதுகாப்பு தொடர்பாடல் அமைச்சரோடு நான் நேரடியாக பேசியிருந்தேன். காரணம் துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது. முன்னர் ஏ.கே 47 பாவிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது எந்த வகையான துப்பாக்கி பாவிக்கப்பட்டுள்ளது என்பது தெரியப் படவில்லை. இந்த துப்பாக்கி பிரயோகம் நொச்சிகுளம் மக்களை பார்த்து தான் பிரயோகிக்கப்படுகிறது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

மன்னார் பொலிசாருடைய மெத்தனப் போக்கும் இதில் அடங்கியிருக்கிறது. அந்த கிராமத்து மக்கள் அச்சத்தோடு வாழும் சூழலிலே மீண்டும் மன்னார் நீதி மன்றத்திற்கு முன் இந்த படுகொலைகள் நடைபெற்றிருக்கிறது. ஆகவே இது கண்டிக்கத்தக்கது.

இவ் விடயம் சம்பந்தமாக ஜனாதிபதி அவர்களினதும் கவனத்திற்கும், பாராளுமன்ற கவனத்திற்கும் முக்கியமான விடயமாக கொண்டு வரவுள்ளேன்.

ஏனென்றால் இது தொடர்ச்சியாக நடைபெறுகிற விடயமாக இருக்கிறது.

போன உயிர்களை மீளப் பெற முடியாது. துப்பாக்கி பிரயோகத்தால் உயிர் நீத்த குடும்பங்கள் பல இ அந்த கிராம மக்கள் அச்சத்தோடு வாழுகின்ற நிலமை தொடர்கின்றது.

ஆகவே இதன் முழுப்பொறுப்பையும் போலீசார் எடுக்க வேண்டும். இந்த சம்பவத்திற்கு காரணம் பொலிசாருடைய கவனயீனம் அசமந்தப்போக்கு என்பதை இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். முப்படைகள் அங்கே பாதுகாப்பு நடவடிக்கையில் இருக்கும் நிலையில் போன்று காட்டிக்கொண்டு இவ்வாறான விடயங்கள் நடைபெறுவது கேள்விக்குறியாகவே இருக்கிறது. அந்த வகையில் இவ்வாறான சம்பவங்கள் நிறுத்தப்பட வேண்டிய விடயங்களாகும்.

சம்மந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்ட வேண்டும். இதற்கான குழு அடங்கிய புலனாய்வு துறை நடவடிக்கைகளை பொலிசார் உடனடியாக ஆரம்பித்து செயலில் இறங்க வேண்டும். மன்னாரில் உள்ள பொலிசாரை மட்டும் வைத்து இதற்குரிய நடவடிக்கைகளை செய்து கொள்வது முடியாத காரியமாகும். எனவே கொழும்பில் இருந்து விசேட குழு அடங்கிய பொலிசார் வரவழைக்கப்பட்ட வேண்டும்.

ஆகவே இந்த சம்பவத்தில் உயிர்நீத்தவர்களுக்கு எனது அஞ்சலியை செலுத்துவதுடன் பொலிசார் அதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டுவதுடன் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்பதே எனது கோரிக்கை.என அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**அதிஷ்டம் காத்திருக்கிறது வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்**

**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்**

**உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்**



**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.**

**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.**

**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.**

**நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.**

**ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.**

**10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.**

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி**. குறைந்தது 2 **புதினங்கள்** அல்லது 4 **சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com


இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/
https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கை இந்திய மீனவர் விவகாரத்தில் மீனவர்களை ஏமாற்ற சிலர் முயற்சியெடுக்கின்றனர் என்கிறார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ்!



இந்திய மீனவர்களின் அத்துமீறல் தொடர்பில் தமிழ்நாட்டு முதலமைச்சருடன் பேசப்போவதாக கூறி வடபகுதி மீனவர்களை சில அரசியல்வாதிகள் ஏமாற்ற முயற்சிப்பதாக முன்னாள் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குற்றம் சாட்டினார்.

தமிழ்நாட்டில், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்ற அயலவர்கள் நிகழ்வில் பங்கேற்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கை - இந்திய மீனவர்கள் தொடர்பில் முதலமைச்சரிடம் பேசாமை தொடர்பில் அவரிடம் கருத்து கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பங்கேற்றார்கள்.

குறித்த நிகழ்வில் இலங்கையிலிருந்து சென்ற சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் செல்பி எடுத்தமை சமூக ஊடகங்களில் வெளியாகியது.

இலங்கை இந்திய மீனவர் விவகாரம் பல வருடங்களாக பேசுபொருளாக இருக்கின்ற நிலையில் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துமாறு தமிழக முதல்வரிடம் நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கலாம், ஆனால் அவர்கள் அவ்வாறு பேசியதாக தெரியவில்லை.

குறித்த நிகழ்வில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமிழக முதல்வருடன் மீனவ விவகாரம் தொடர்பில் பேசுவதற்கு தயாராக இருப்பதாகவும் அதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளதாகவும் தெரிவித்திருந்தார்.

அவரது கருத்தானது வடபகுதி மீனவர்களை ஏமாற்றும் ஒரு நாடகமாக நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் தமிழக முதல்வரின் அருகில் அமர்ந்திருக்கும் போது மீனவ விவகாரம் தொடர்பில் பேசி இருக்கலாம். அல்லது குறித்த நிகழ்வு முடிவடைந்த பின் தமிழக ஊடகங்களுக்கு இந்த மீனவ விவகாரத்தில் உண்ம தன்மையை தொடர்பில் தெரியப்படுத்திருக்கலாம், ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை.

நான் கடற்தொழில் அமைச்சராக இருந்தபோது இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுகின்ற பிரச்சினை தொடர்பில் இரு நட்டு மீனவர்களையும் அழைத்து தமிழ்நாட்டில் பேசுவதற்காக தமிழக தலைவர்களுடன் பேசினேன். நேரில் பேசுவதற்கு நேரம் தருவதாக கூறினார்கள் துரதி'ட்ம் அதிகாரம் என்னிடம் இல்லை.

நான் தற்போது அதிகாரத்திலிருந்து குறித்த நிகழ்வுக்கு தமிழ்நாடு சென்று இருந்தால் தமிழக முதலமைச்சருடன் பேசி இரு நாட்டு மீனவர்களையும் அழைப்பது தொடர்பில் முடிவு எடுத்திருப்பேன்.

இதையே நான் கூறுகிறேன் என்றால் எனது அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களுக்காக பல விடயங்களை சந்தர்ப்பம் பார்த்து பலவற்றை சாதித்திருக்கிறேன்.

உதாரணமாக கூற வேண்டுமானால் அறிவியல் நகர் பல்கலைக்கழகத்தை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிப்பதற்கு மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது அனுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவரிடம் பேசி சம்மதத்தை பெற்றேன்.

ஒருவேளை அறிவியல் நகர் பல்கலைக்கழகத்தை விடுவிப்பது தொடர்பில் பேசுவதற்கு நேரம் கேட்டிருந்தால் ஒரு வேளை அது நடைபெறாமல் போயிருக்கும்.

இது போன்ற பல உதாரணங்களை என்னால் குறிப்பிட முடியும் இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களை அழிவு பாதைக்கு கொண்டு சென்றதும் அவர்களின் சுயலாப அரசியலுக்காக.

போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகின்ற நிலையில் தமிழ் மக்களின் அரசியல் தீர்வு இன்னும் கிடைக்கவில்லை அதற்கான பல சந்தர்ப்பங்கள் இருந்த போதும் அதனை தமிழ் அரசியல் தலைமைகள் பயன்படுத்தவில்லை.

இப்போது இந்தியா மீனவர்களின் எல்லை தாண்டிய விவகாரம் வடபகுதி மீனவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வரும் நிலையில் அதனையும் தமிழ் அரசியல்வதிகள் தமது சுயலாப அரசியலுக்காக பயன்படுத்தி வருகின்றார்கள்.

நான் அமைச்சராக இருந்தபோது வாருங்கள் இந்தியா சென்று மீனவர் விவகாரம் தொடர்பில் பேசுவோம் என்றேன் ஒரு சிலரை தவிர ஏனையவர்கள் மறுத்து விட்டார்கள்.

தேர்தலின் போது நான் பல ஆசனங்களை கேட்கவில்லை சில ஆசனங்களை எனக்கு தாருங்கள் மக்களின் அரசியல் அன்றாட பிரச்சனை மற்றும் அபிவிருத்தி என்பவற்றை தீர்த்து வைக்கிறேன் என வெளிப்படையாகவே கூறி வந்தேன்.

ஆனால் மக்கள் ஏதோ ஒன்றை நம்பி வாக்களித்து தற்போது ஏமாற்றம் அடையும் நிலையை எதிர்நோக்கி உள்ளனர்.

சில தமிழ் அரசியல்வாதிகளுக்கு இந்திய மீனவ விவகாரத்தை கையில் எடுத்தால் இந்தியா தம்மை பகைத்து விடும் மக்கள் என்ன துன்பத்தை அனுபவித்தாலும் பரவாயில்லை தமது இருப்பு கலை தக்க வைக்க வேண்டும் என்ற நினைப்புடன் பயணிக்கிறார்கள்.

புதிய கடற்தொழில் அமைச்சரும் தமிழ்நாட்டில இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த நிலையில் அவரும் தமிழக முதலமைச்சருடன் பேசவில்லை.

முதலமைச்சருடன் பேசாதது ஒருபுறம் இருக்க அந்த நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் வெளியில் காத்திருந்த தமிழக ஊடகங்களுக்கு முன்னால் தமிழக எல்லை தாண்டிய மீனவர்களினால் எமது வடபகுதி மீனவர்களின் படம் துன்பத்தை எடுத்து கூறி இருக்கலாம் அவ்வாறு கூறவில்லை.

ஆகவே மீனவ மக்கள் சரியான தீர்மானங்களை சரியான இடங்களில் எடுக்காததன் விளைவு எதிர்காலத்தில் பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதை தவிர்க்க முடியாது போகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறீதரன் எம்.பி முடிந்தால் ஸ்டாலினுடன் பேசி மீனவர் பிரச்சினையை தீர்த்து வைக்கட்டும் என்கிறது யாழ்ப்பாண மீனவர் அமைப்பு!

முடிந்தால் கிளிநொச்சியில் உள்ள தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள், தமிழக முதலமைச்சருடன் கதைப்பதற்கு நேரத்தினைப் பெற்று, அவருடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்சினையை தீர்த்து வைக்கட்டும், அதன் பின்னர் நாங்கள் அவரது செயற்பாடுகளை வரவேற்கின்றோம் என யாழ்ப்பாண மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்தின் உபதலைவர் பிரான்சிஸ் ரட்ணகுமார் தெரிவித்துள்ளார்.

சம்மேளனத்தின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது எமது கடற்தொழில் அமைச்சராக உள்ள சந்திரசேகரன் அவர்களுக்கும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் முதலமைச்சர் ஸ்டாலினுடன் கதைப்பதற்கு நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைத்தும் அவர்கள் அதனை சரியாக பயன்படுத்தவில்லை.

அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் முதலமைச்சர் ஸ்டாலினுக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அங்கு இருந்த போதே இலங்கை மீனவர்களின் பிரச்சினைகளை முதலமைச்சரிடம் எடுத்துக் கூறாமல் இங்கு வந்தபின்னர், முதலமைச்சருடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கி தருமாறு தான் கேட்டுள்ளதாகவும், மீனவர்களின் பிரச்சினைகளை கதைக்கப்போவதாகவும் கூறுகின்றார். இதெல்லாம் பகட்டுக்கும், எதிர்காலத்தில் மீனவர்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காகவும் கூறுகின்றார்.

இந்தியாவில் தேர்தல் நெருங்குகின்றது. தேர்தல் காலத்தில் உங்களுக்கு நேரம் ஒதுக்கி தர மாட்டார்கள். இயலும் என்றால் நீங்கள் நேரத்தினை பெற்று நமது மீனவர்களின் பிரச்சினை குறித்து பேசித் தீருங்கள், அதற்கு பின்னர் நாங்கள் உங்களை வரவேற்கின்றோம்.




தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் கதைப்பதற்கு, கடந்த காலத்தில் கடற்தொழில் அமைச்சராக இருந்த டக்ளஸ் தேவானந்தாவிடமும் கோரிக்கை முன்வைத்தோம் இதன்போது அவர் மு.க.ஸ்டாலின் மற்றும் கனிமொழி ஆகியோரிடம் இது குறித்து தெரிவித்தார். இருப்பினும் எமக்கான நேரம் வழங்கப்படவில்லை. அப்படி எமக்கு நேரம் வழங்கப்பட்டிருந்தால் நாங்கள் எமது பிரச்சினைகளை நேரடியாகவே எடுத்துக்கூறி இருப்போம் என்றார்.

# வடக்கு மாணவர்கள் சில துறைகளை உயர்கல்விக்கு தேர்வு செய்யாமையால் வேறு மாகாணத்தில் இருந்து ஆட்சேர்ப்பு இடம்பெறுகிறது என சுட்டிக்காட்டுகின்றார் வடக்கு ஆளுநர் வேதநாயகன்!



வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்கள் சில துறைகளை உயர்கல்விக்காக தேர்ந்தெடுக்காமையால் இங்குள்ள வெற்றிடங்களுக்கு வேறு மாகாணத்தைச் சேர்ந்தவர்களை நியமிக்கவேண்டிய நிலைமை காணப்படுகின்றது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் சுட்டிக்காட்டினார்.

யாழ். கல்விக் கண்காட்சி - 2025 திறப்பு விழா 11-01-2025 சனிக்கிழமை காலை வலம்புரி ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர், சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன் மற்றும் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் ஆகியோர் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.


இங்கு உரையாற்றிய ஆளுநர், முன்னைய காலத்தில் இலங்கையின் அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகும் குறிப்பிட்ட தொகையானவர்களுக்கு மாத்திரமே உயர்கல்விக்கான வாய்ப்பு இருந்ததாகவும் இன்று அந்த நிலைமை மாறியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போது அரச பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்களும் உயர்கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பு பரந்தளவில் கிடைப்பதாகவும் தெரிவித்த ஆளுநர் அதனைச் சரிவரப் பயன்படுத்தவேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார். அத்துடன் எமது முயற்சி மற்றும் தேடலில்தான் உயர்கல்வித் தெரிவு இருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டிய ஆளுநர், பொருத்தமான துறைகளை தெரிவு செய்வதன் ஊடாக வேலை வாய்ப்பை உறுதிப்படுத்திக் கொள்ளலாம் எனத் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தின் முக்கிய சொத்து கல்வி என்பதைக் குறிப்பிட்ட ஆளுநர், இவ்வாறான கல்விக் கண்காட்சிகள் எமது மாகாண மாணவர்களின் எதிர்காலத்துக்கு சிறப்பானவை என்றும் இவை தொடரவேண்டும் எனவும் வலியுறுத்தினர்.



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1129

## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*" ஐந்து கரத்தனை ஆறுமுகத்தனை*
*இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை*
*நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை*
*புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே "*

இடையரின் கனவிலே வெளிப்பட்ட மருதடி வேர்க்குமிழ், "நான் வெயிலிலும் மழையிலும் அவதிப்படுகின்றேன் நீ நன்கு உறங்குகின்றாயே" எனப் புலப்படுத்தியது. சிலவேளைகளில் மனதின் அடித்தளத்தில் உறைந்து கிடக்கும் எண்ணங்கள் கனவாக வெளிப்படுவதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். ஆயினும் அவ்வப்போது அடியவர்கள் எண்ணத்தில் எழும் கனவுகளை, இறைவனின் அனுக்கிரகம் அல்லது அருள் என மெஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

மருதடி மரக்குமிழைக் கனவிலே கண்டதும், மரக்குமிழ் இடையரோடு பேசியதும் இடையரைப் பேதலிக்கச் செய்தது. இது இறைவனின் அருள் என்பதில் இடையர் அசையாத நம்பிக்கை கொண்டவராகக் காணப்பட்டார். இவ்வாறான அருளின் வெளிப்பாடாக, மருதடி மரக்குமிழ்பற்றிய கனவினை இடையர் பெருமகனார் ஏற்று, விடிந்ததும் மருதமரத்தினைச் சென்றடைந்தார். கனவிலே கண்டவாறு காணப்பட்ட மருதமரக் குமிழை வணங்கி வழிபட்டார். தம்மால் சிறு குடிலைத்தன்னும் மருதமரக்குமிழுக்கு அமைக்கமுடியாத இயலாமையை எண்ணி வருந்தினார். ஆயினும் தனது மனச்சாந்தியின்பொருட்டு, அருகிலே காணப்பட்ட பனைஓலையை எடுத்துவந்து, வேர்க்குமிழில் வெயில் படாதவாறு சாத்தினார். இவ்வாறான ஏற்பாட்டினால் இடையருடைய மனம் ஆறுதல் பெற்றது.

இவ்வாறாக மருதடி மரக்குழிழுக்குப் பனைஓலையால் பாதுகாப்பு அளித்தபின், தான்கண்ட கனவை ஊரவர்க்குத் தெரியப்படுத்தினார். ஆனால் அதன்பின்னர் இடையருக்கு என்ன ஆனதென்று எவராலும் அறியமுடியாத நிலையிலே, அவர் எங்கோ சென்றுவிட்டார். இவரது வருகையும், மறைவும் இறைவனுடைய திருவிளையாடலென ஊரவர்கள் எண்ணிக்கொண்டனர்.

மருதமரத்தைச் சார்ந்த கம்மிக்குளத்திற்கு மேற்கே பரந்திருந்த நிலப்பரப்பிலே, விஸ்வ குலத்தவர்கள் வாழ்ந்துவந்தனர். இக்குலத்திலே சைவநெறிச்செல்வராக, அன்பும் பண்பும் கொண்டவராக, நன்னியர் ஆச்சாரி என்பவர் வாழ்ந்து வந்தார். இடையர்மூலம் அவர் கனவிலே மருதமரக்குமிழ் வெளிப்பட்டதையும், அதன் அற்புதங்களையும் அறிந்து வைத்திருந்தார். இக்காரணத்தினால் மருதமரக்குமிழ்மீது மிக்க அன்பும், பக்தியும் கொண்டவராகக் காணப்பட்டார். இதன் வெளிப்பாடாகத் தினமும் மருதமரக்குமிழை வணங்கி வழிபட்டுவந்தார். இதன்பின்னர் அவரது வாழ்க்கையில் நன்மைகள் பல நிகழ்ந்ததோடு, அமைதியும், மகிழ்ச்சியும் நிலவியதை அவதானித்தார். இதனால் மனமகிழ்ச்சிகொண்ட நன்னியர் ஆச்சாரி, மருதமரக்குமிழுக்குக் கொட்டில் அமைத்து, வழிபாடியற்றி வந்தார். மருதமரக்குமிழைத் தமது குலதெய்வமாகக் கருதி போற்றி வழிபட்டார். இவ்வாறான நிலையிலே அவர் வாழ்வு நிறைவு பெற்றது.

நன்னியர் ஆச்சாரியின் மறைவுக்குப் பின்னர், அவரது மகனாகிய வல்லிபுர ஆச்சாரியார், மருதமரக்குமிழின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டவராகக் காணப்பட்டார். தந்தையார் வேர்க்குமிழ்மீது கொண்ட பக்தியை நன்கறிந்த காரணத்தால், ஊரவர்களின் உதவியோடு மரக்குமிழுக்கு மடாலயம் அமைக்க எண்ணங்கொண்டார். தந்தையாரால் அமைக்கப்பட்ட கொட்டிலை அகற்றி, மடாலயம் கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பித்தார். மடாலயத்திற்குரிய சுவரை அமைப்பதற்கு அத்திவாரம் வெட்டப்பட்டது. அவ்வேளையில் அங்கு வேலை செய்த பணியாட்களுக்கு உணவெடுத்து வருதவதற்காக, வல்லிபுர ஆச்சாரியார் தமது வீடு சென்றார். மடாலய வேலைகளில் தாமும் பணியாற்றிய காரணத்தால் களைப்புற்றிருந்த ஆச்சாரியர். சற்றுநேரம் கண்ணயர்ந்துவிட்டார்.

ஆழ்ந்த தூக்கத்திலிருந்த ஆச்சாரியார் கனவிலே மரக்குமிழ் வெளிப்பட்டு, "நீ இங்கு உறங்குகிறாய். நான் அங்கு கோடரியால் வெட்டுண்டு வேதனைப்படுகிறேன்" என்று வெளிப்படுத்தியது. தூக்கத்திலிருந்து துடிதுடித்தெழுந்த ஆச்சாரியார், வேர்க்குமிழுக்கு என்ன நடந்ததோ என்ற கலக்கத்தோடு ஓடோடிவந்து, மருதமரக்குமிழை நோக்கினார். அவர் கண்ட காட்சி ஆச்சாரியாரை வேதனைப்படுத்தியது. மருதமர வேர்க்குமிழை உற்றுநோக்கினார். மோதகவடிவிலே காணப்பட்ட வேர்க்குமிழிலிருந்து செந்நீர் வடிந்து கொண்டிருந்தது. செந்நீரைக்கண்டதும் வேதனையால் துடித்தார். என்ன செய்வதென்று அறியாது தவித்தார். இவரது செய்கைகளைக் கவனித்த பணியாளர்கள் திகைத்தனர். அப்பொழுது ஆச்சாரியார் பணியாட்களிடம் தான் கண்ட கனவை எடுத்துரைத்தார்.

பின்னர் விக்னம் தீர்க்கும் விநாயகனே அங்கு எழுந்தருளியிருப்பதாக உணர்ந்து, அவரை வணங்கி வழிபட்டு சுவரமைக்கும் பணி இனிதே நிறைவேற, அருள்பாலிக்குமாறு வேண்டிப் பணிந்தார். அடியவர் குறைதீர்க்கும் விநாயகன் அருளால், சுவர் கட்டும் பணி மீண்டும் ஆரம்பமானது. தாமே நேரில்நின்று மேற்பார்வைசெய்து, மருதமரக்குமிழுக்குப் பங்கம் ஏற்படாது, அத்திவாரம் வெட்டுவித்து சுவர் எழுப்பி, மூடுசாந்தால் கூரையிட்டுக் கருவறையையும் அமைத்தார். இவ்வாறாக வருத்தலைவிளானில் எழுந்தருளியுள்ள மருதடிப்பிள்ளையார் ஆலயம் உருவானது. பிள்ளையாரின் அருளையும் அற்புதத்தையும் கேள்விப்பட்ட வருத்தலைவிளான் மக்கள் மட்டுமன்றி, அயல் ஊரவர்களும் விநாயகனை நாடிவரத் தொடங்கினர். வர்த்தலைவிளான் மருதடிப்பிள்ளையாரின் ஆலய வளர்ச்சியும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி அடைந்தது. இவ்வளர்ச்சிக்குப் பலர் காரணிகளாக அமைந்தனர்.

*வளரும்...*




**இலங்கையில் கண்டி கொழும்பு ஆகிய நகரங்களில் கனேடிய தரத்திற்கு நிகராக முதியோருக்கான நீண்ட கால பராமரிப்பு வசதி**

**Canadian Standard Long Term Care Facility in Kandy & Colombo - Sri Lanka**

Are you living Abroad?
No one to take care of your aging parents / Family member in Sri Lanka? We are here for you...
With Canadian Senior Care Standards
Love for your loved ones....

1. Skilled Nursing care 24/7
2. Medical Services
3. Dementia/Alzheimer care
4. Luxury rooms
5. Nutritious meals
6. Physiotherapy
7. Social Activities
8. Religious Activities
9. Ayurveda Treatments

Our Newest Senior living Retreat in Sri Lanka offers quality long term care for your loved ones.
Our focus is providing exceptional services by Canadian trained and registered care professional, who truly care in an environment that promotes healing and wellness.

LET OUR FAMILY TAKE CARE OF YOURS
FACILITY STARTING MID 2025

CALL US FOR MORE INFORMATION
WHATS APP SRI LANKA: +94777872968
WHATS APP CANADA: +15875835686
EMAIL: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

நீங்கள் வெளிநாட்டில் வசிக்கிறீர்களா?
இலங்கையில் உங்கள் வயதான பெற்றோர் / குடும்ப உறுப்பினரை கவனித்துக்கொள்ள யாரும் இல்லையா?
நாங்கள் உங்களுக்காக இலங்கையில் இருக்கிறோம் ...
கனடிய முதியோர் பராமரிப்பு தரத்திற்கு நிகராக அனைத்து வசதிகளுடன் நாம் சேவை செய்கின்றோம்
உங்கள் அன்புக்குரியவர்கள் நாமும் அன்பு காட்டுவோம்

1. அனுபவம் நிறைந்த மருத்துவ உதவியாளர்களின் 24/7
2. மருத்துவ சேவைகள்
3. மென்டியா/அல்சைமர் ஆகிய நோய்களுக்கான பராமரிப்பு
4. Luxury நிறைந்த வசதியான அறைகள்
5. ஊட்டச்சத்து உணவு
6. பிசியோதெரபி- உடற் பயிற்சி வசதிகள்
7. சமூக மற்றும் பொழுதுபோக்கும் வசதிகள்
8. உங்கள் மதம் சார்ந்த வழிபாடுகள் மற்றும் பிரார்த்தனைகள் அனைத்தும் அடங்கும்
9. அத்துடன் Ayurveda சிகிச்சைகள்

இலங்கையில் எங்கள் புதிய மூத்தவர்களின் புதிய வாழ்க்கை பின்வாங்கல் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு தரமான நீண்ட கால பராமரிப்பை வழங்குகிறது.
எங்கள் கவனம் கனேடிய பயிற்சி பெற்ற மற்றும் பதிவுசெய்யப்பட்ட பராமரிப்பு நிபுணரின் விதிவிலக்கான சேவைகளை வழங்குவதாகும்,
அவர்கள் குணப்படுத்துதல் மற்றும் ஆரோக்கியத்தை ஊக்குவிக்கும் சூழலில் உண்மையிலேயே அக்கறை காட்டுகிறார்கள்.

எங்கள் குடும்பம் உங்கள் அன்புக்குரியவர்களை கவனித்துக் கொள்ளும் இந்த சேவை 2025 நடுப்பகுதியில் தொடங்குகிறது.

மேலும் தகவலுக்கு எங்களை அழைக்கவும்:
வாட்ஸ் ஆப் இலங்கை +94777872968
வாட்ஸ் ஆப் கனடா +15875835686
மின்னஞ்சல்: mistymountaincare@gmail.com
Chamarimw@gmail.com

# இவ்வார ராசிபலன்

**17-01-2025 வெள்ளி தொடக்கம் 23-01-2025 வியாழன் வரையும்**







**மேஷம்:** செல்வாக்கு உயரும் வாரம். வாடும் நிலை விலகி, வீடு நிலம் வாங்கக்கூடிய அற்புதமான காலம். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். திடீர் மாற்றங்கள் நிகழும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கடன் சுமை குறையும். தாய்வழி தகராறு குறையும். கனவுகள் பலிதமாகும். கனிவான பேச்சு அவசியம். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆலய தரிசனம் அமைதி தரும். இனம் புரியா சந்தோஷம் ஏற்படும். பிள்ளைகளால் தனவரவு உண்டு. வெளியூர் பிரயாணம் வெற்றி தரும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். வறுமையின் வாட்டம் குறையும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. பயணங்களால் பணம் கரையும். அரசு வழியில் ஆதாயம் உண்டு. பழைய பாக்கிகள் வசூலாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்பாட்டில் கவனம் தேவை. கூட்டுத்தொழில் லாபம் தேவை. ஆரோக்கியம் கூடும். சவாலான விஷயங்களை சமாளித்து சாதனை நிகழ்த்தும் காலம். கர்ம வினைகள் அகலும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர். குதூகலம் கூடும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இஷ்ட தெய்வம், அதிர்ஷ்ட எண்: *8,4,3,2*

அதிர்ஷ்ட நிறம்: செந்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,W




**ரிஷபம்:** இல்வாழ்க்கை நல்வாழ்க்கையாய் அமையும் வாரம். புதிய வாய்ப்புக்கள் கூடும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். வியாபார லாபம் கூடும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசு வழியில் ஆதாயம் பெருகும். பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பழையக்கடன் வசூலாகும். மனிதநேயம் மிகுதியாகும். நண்பர்கள் உதவி கிடைக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பாவங்கள் விலகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. முன்கோபத்தை தவிர்ப்பது நல்லது. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் போட்டி மறையும். குடும்பத்தில் அமைதி நிலவும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். காதலர்கள் ஒற்றுமை கூடும். உடன்பிறப்புக்களின் உதவி கிடைக்கும். மங்கள செய்தியால் மனம் மகிழும். வங்கி சேமிப்பு உயரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். புது முயற்சி தள்ளி வைக்கவும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். உழைப்பால் மதிப்பும், உங்களால் சிறப்பும் சேரும் காலம். மனைவியால் மதிப்பு உயரும். மன அமைதி கிட்டும். மந்தமான நிலை மாறும். அற்புதமான தருணம். பொருளாதாரம் உயரும். சிறப்புக்கள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: விநாயகர், அதிர்ஷ்ட எண்: *5,2,3,1*

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,O




**மிதுனம்:** கௌரவ வாய்ப்பு கிடைக்கும் வாரம். கைமேல் காசு கிடைக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். விபரீத எண்ணம் விலகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். இனிப்பான செய்திகள் வரும். சுறுசுறுப்பாகச் செயல்படுவீர். பயணம் வெற்றி தரும். உதவும் குணம் உண்டு. சாதக சூழ்நிலை உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. ஐஸ்வர்யம் கிடைக்கும். ஊக்கத்தோடு செயல்பட்டு உயர்வுகளை சந்திக்கும் உன்னதமான காலம். விரும்பியது நிறைவேறும். உற்சாகம் களை கட்டும். வேலைப்பளு அதிகரிக்கும். புது சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டும். கலைத்தொழில் திருப்பம் ஏற்படும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு கூடும். கமிஷன் தொழில் லாபம் தரும். தொழில் லாபம் பெருகும். போட்டிகள் கடுமையாகும். வியாபாரம் சுமாராக இருக்கும். நிர்வாக அலைச்சல் கூடும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். துன்பம் விலகி ஓடும். இழந்த செல்வம், இழந்த கௌரவம் திரும்பக் கிடைக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகளில் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மஹாலஷ்மி அதிர்ஷ்ட எண்: *2,4,3,9*

அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,W




**கடகம்:** சாதகமான சூழ்நிலை உருவாகும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. மனைவியால் மரியாதை உயரும். பகைவர் பணிந்து நிற்பர். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். உறவுகளால் மதிப்பு கூடும். உத்தியோக உயர்வு கிட்டும். பாக்கிகள் வசூலாகும். வியாபார அபிவிருத்தி ஏற்படும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். சுபிட்ஷங்கள் பெருகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை உண்டு. பல் வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். மாற்றங்கள் கிடைக்கும். மகத்தான காலம். நினைத்ததெல்லாம் நடக்கும் நேர்த்தியான காலம். வீண் வம்பு விலகும். வயிற்று உபாதைகள் தோன்றி மறையும். விரக்திகள் மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கைகொடுக்கும். செல்வச் செழிப்பு உயரும். காரியம் கைக்கூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். நெருக்கடிகள் குறையும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டு. பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: *4,2,9,6*

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**சிம்மம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பிரார்த்தனை நிறைவேறும். பிரபல்யம் ஆகும் வாய்ப்பு வரும். உடல் நலனில் அதிக அக்கறை தேவை. பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் உண்டு. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை நீங்கும். குடும்ப குழப்பம் தீரும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. பெற்றோர் வாழ்த்து உண்டு. முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணம் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். செயல் விவேகம் கூடும். காயத்ரி மந்திரத்தால் கஷ்டங்கள் விலகும். பட்டம் பதவி தேடி வரும். சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கனிவான பேச்சு அவசியம். பணிவான செயல்களால் காரியத்தால் வெற்றி காணும் காலம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பெற்றோர் பாராட்டு கிட்டும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் பெருகும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகுவர். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். போட்டிகள் அதிகரிக்கும். மங்களச் செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *3,9,2,1*

அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,K




**கன்னி:** இல்லம் வளர்ச்சி அடையும் வாரம். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். பிள்ளைகளால் பெருமை சேரும். புதிய முயற்சிகள் பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச் சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பஞ்சாயத்து மூலம் பழையக் கடன் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. குடும்ப ஒற்றுமை மேலோங்கும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். திட்டமிட்ட காரியங்கள் நட்டமில்லாமல் நடக்கும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். செல்வாக்கு உயரும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும். கடன் சுமை குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். தாய்வழி தகராறுகள் குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். கலகலப்புக் குறையும். உறவினர் வருகையால் செலவு ஏற்படும். சுபிட்ஷங்கள் பெருகும். ஒரு சிலருக்கு கவுரப் பதவி தேடி வரும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். பண நடமாட்டம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: *8,1,2,7*

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,E




**துலாம்:** சொந்தங்களால் மனநிறைவு கிட்டும் வாரம். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். நட்பு வட்டம் விரிவடையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். வெளி தொடர்பு ஆதாயம் தரும். சேமிப்பு வளரும். வியாபாரம் சிறந்து விளங்கும். நீண்ட நாளைய நோய் விலகும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். செய்த்தொழில் சிறப்படையும். திட்டமிட்ட காரியம் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். அரசியல்வாதிகள் அனுகூலம் பெறுவார்கள். தொட்டது துலங்கி சட்டென உயரக்கூடிய சாதகமான காலம். பேச்சில் பணிவு தேவை. தனவரவுகள் தடைப்படும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். திடீர் செலவு ஏற்படும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். மனைவியால் மதிப்பு உயரும். குடும்ப மேன்மைகள் உண்டாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லையுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் ஏற்படும். காதலால் மகிழ்ச்சி உண்டு. நோய் நொடிகள் அகலும். வாய்ப்பேச்சில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் கவனம் தேவை. நிதி நிலைமை சீராகும். உதவிகள் கிடைக்கும். கலை ஈடுபாடுகள் அதிகரிக்கும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். பிணிகள் நீங்கும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: *2,9,6,1*

அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,L




**விருச்சிகம்:** பெத்தவங்களோட ஆசி கிட்டும் வாரம். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலம் கவனம் தேவை. அனுகூலமான போக்கு நிலவி வரும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். மனைவியால் மதிப்பு உயரும். பழைய பகை மாறும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். திட்டமிட்ட செயல் வெற்றி தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். அத்தியாவசிய செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு.

**(தொடர்ச்சி *26* பக்கம்)**

கனடிய செய்திகள்
Canadian News

# Remax Ace Realty Inc Brokerage, operating in Toronto, hosted it's 10th Annual Awards Gala on Saturday 11th, Jan. 2025.

# ஸ்காபுறோவில் இயங்கிவரும் Remax Ace Realty Inc Brokerage நிறுவனம் நடத்திய பத்தாவது ஆண்டு விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் வைபவம்




**Remax Ace Realty Inc Brokerage, operating in Toronto, hosted it's 10th Annual Awards Gala on Saturday 11th, Jan. 2025. Many Agents and Brokers were honored according to their Sales Achievements in 2024.**



ஸ்காபுறோவில் கடந்த பத்து வருடங்களாக வெற்றிகரமாக இயங்கிவரும் Remax Ace Realty Inc Brokerage நிறுவனம் தனது பத்தாவது ஆண்டு விற்பனையாளர்கள் விருதுகள் வழங்கும் வைபவத்தை கடந்த 11-01-2025 அன்று மாலை ஸ்காபுறோவில் நடத்தியது.

ஐந்து பங்காளர்கள் இணைந்து ஆரம்பித்த இந்த நிறுவனம் தொடர்ந்து பத்தாண்டுகள் நூற்றுக்கணக்கான வீடு விற்பனை முகவர்களை உள்ளடக்கி விற்பனையில் அவர்கள் சாதனைகளை நிலைநாட்டிவருவதையும் அறியக்கூடியதாக உள்ளது.











அவர்களுள் பல இனங்களைச் சார்ந்தவர்களாகவும் வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்றவர்களாகவும் விளங்குவது இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்றைய விற்பனை விருதுகள் வழங்கும் விழாவிற்கு ஒன்றாரியோ மாகாண வீடமைப்பு வசதிகள் அமைச்சின் இணை அமைச்சரும் மாகாண சபை உறுப்பினருமான விஜேய் தணிகாசலம் அவர்கள் பிரதம விருந்தினராகக் அழைக்கப்பெற்றிருந்தார்.

அங்கு பல விற்பனை முகவர்கள் தங்கள் விற்பனையின் எண்ணிக்கை மற்றும் இதர முயற்சிகள் ஆகிய சாதனைகளுக்காக அதற்கேற்ப விருதுகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

அங்கு தத்தமது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நண்பர்கள் என அனைவரோடும் கலந்து சிறப்பித்து விழாவை வெற்றிகரமானதொன்றாக விளங்கச் செய்த விற்பனை முகவர்கள் அனைவருக்கும் நிறுவனத்தின் பங்காளர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துள்ளார்கள்.

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய ஈழத்து "பொப்" இசைப் பாடல்களுக்கு உயிர் கொடுக்கும் கனடா வாழ் இசைக் கலைஞர் பாபு ஜெயகாந்தன்..



## கனடாவில் தொடர்ச்சியாக இசை நிகழ்ச்சிகளில் 100 ஈழத்து "பொப்" இசைப் பாடல்களைப் பாடி ரசிகர்களை மகிழ்வித்தும் சாதனையொன்றை நிலை நாட்டியும் "நிமிர்ந்து" நிற்கும் பாடகர் "பாபு"

**- ஸ்காபுறோவிலிருந்து ஆர்.என். லோகேந்திரலிங்கம்**

இலங்கையில் 50களில் பிறந்தவர்களுக்கும் அதற்குப் பின்னர் பிறந்தவர்களுக்கும் கிடைத்த இனிய இசை அனுபவம் எதுவென்றால், 1970ம் ஆண்டளவில் இலங்கையில் உருவாக்கம் பெற ஆரம்பித்த "பொப்" இசைப் பாடல்கள் ஆகும்.

அன்றைய நாட்களில் இலங்கையில் எந்தப் பகுதியில் நடைபெறும் இசை நிகழ்ச்சிகள், மற்றும் ஆலய திருவிழாக்களின் போது ஏற்பாடு செய்யப்பெறும் மெல்லிசை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் திரை இசைப் பாடல்களோடு ஈழத்து "பொப்" இசைப் பாடல்கள் சிலவற்றையாவது எமது ரசிகர் கேட்டும் நடனமாடியும் ரசித்த அனுபவங்கள் எம்மில் பலரின் இதயங்களுக்கு இதமூட்டிக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான இனிதான "பொப்" இசைப் பாடல்களை இயற்றியும் இசையமைத்தும் பாடியும் எம்மையெல்லாம் மகிழ்வித்த கலைஞர்களில் பலர் இன்று எம்மோடு இல்லை. காலம் அவர்களைக் காவிச் சென்றாலும் அவர்கள் உருவாக்கிய பாடல்கள் மாத்திரம் "சாகா வரம் பெற்றவையாக" இன்னும் எம்மை மகிழ்விக்கின்றன.

இவ்வாறான சாகா வரம் பெற்ற ஈழத்துப் "பொப்" இசைப் பாடல்கள் பலவற்றை தேடித் தேடிப் பெற்று, எம் காதுகளுக்கும் எம் உள்ளங்களுக்கும் கொண்டு வந்து சேர்க்கும் அரிய இசைப் பணியை கனடாவில் ஆற்றிக் கொண்டிருக்கும் எம் மத்தியில் இன்றும் பயணிக்கும் இசைக் கலைஞர் பாபு ஜெயகாந்தன் அவர்களை அறிமுகம் செய்து வைத்து பாராட்டும் நோக்கோடு தான் இந்த கட்டுரை வடிக்கப் பெறுகின்றது.

இந்தக் கட்டுரையின் நாயகன் பாபு ஜெயகாந்தன் அவர்கள் 1996ம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்து வருகின்றார். அவர் கொழும்பில் பிறந்து வளர்ந்து அங்கும் இசைக்குழுக்கள் பலவற்றோடு இணைந்து தனது இசை ஆர்வத்தை வளர்த்து வந்துள்ளார்.




கொழும்பில் வாழ்ந்த காலத்தில் டி ரியுனர்ஸ் மற்றும் சித்தாரா, Thundersparks இசைக்குழு ஆகிய இசைக்குழுக்களில் இணைந்து பணியாற்றி அந்த அனுபவத்தோடு கனடா வந்தார்.

இங்கும் பல இசைக் கலைஞர்களோடும் இசைக் குழுக்களோடும் இணைந்து பல மேடைகளை அலங்கரித்த பாபு ஜெயகாந்தன் அவர்கள் தொடர்ச்சியாக இசைத்துறையை விட்டு விலகிவிடாமல் பயணித்து வருகின்றார்.

தற்போது கனடாவில் புகழ்பெற்ற இசைக்குழுக்களில் ஒன்றான "லதன் பிரதர்ஸ்" இசைக் குழுவில் முக்கிய வாத்தியக் கலைஞராகவும் "பொப்" இசைப் பாடகராகவும் விளங்கி வருகின்றார்.

ஈழத்து "பொப்" இசைப் பாடல்கள் மீதான பாடகரும் இசைக் கலைஞருமான பாபு ஜெயகாந்தன் அவர்களின் ஆர்வம் எத்தனையோ வருடங்களாக தொடர்கின்றன.

எனினும் இவை மறைந்து விடக்கூடாது. தொடர்ச்சியாக இசை ரசிகர்கள் மனங்களிலிருந்து இந்த பாடல்கள் விலகி விடாமல் நிற்க எமது மேடைகளில் தொடச்சியாகப் பாடவேண்டும். அத்துடன் 100 ஈழத்து "பொப்" இசைப் பாடல்களை எண்ணிக்கைகளின் தொடர்ச்சியாக பாடி ஒரு சாதனையை நிலை நாட்டுவதன் மூலம் இசை ரசிகர்கள் மனங்களில் அவை நிறைந்த நிற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தற்போது பாபு ஜெயகாந்தன் அவர்கள் நூறாவது பாடலைப் பாடிய நிறைவோடு எம் மத்தியில் பாராட்டுக்களைப் பெறும் ஒருவராக ஒளிவீசி வருகின்றார்.

ஈழத்து "பொப்" இசைத்துறை முன்னணிப் பாடகராக விளங்கிய ஏ.இ. மனோகரன் அவர்களின் "இலங்கை என்பது எம் தாய்த்திருநாடு" என்ற பாடலோடு ஆரம்பித்த பாபு ஜெயகாந்தனின் 100 பாடல்களைப் பாடும் பயணம் பாபு அவர்களே பாடிய "குண்டு மணி குண்டு மணி" என்னும் பாடலோடு நிறைவு பெற்றுள்ளது. எனினும் அவரது ஈழத்து "பொப்" இசைப் பாடல்கள் மீதான "தேடல்" தொடரும் என்று உறுதியாக எம்மிடன் தெரிவித்துள்ளார். நாம் ரசித்து மகிழும் எமது ஈழத்து "பொப்" இசைப் பாடல்களின் சிறப்பு என்னவென்றால் இவ்வளவு எண்ணிக்கையாக பாடல்களை எமக்களித்தவர்கள், தமிழ் பேசும் பாடகர்கள் மாத்திரமல்ல எச். எம். பெர்ணான்டோ போன்ற ஒரு சில எமது சகோதர மொழிப் பாடகர்களும் அடங்குகின்றார்கள் என்பதே உண்மை.

***இறுதியாக ஒரு "போனஸ்" குறிப்பு: இவ்வாறான எமது ஈழத்து "பொப்" இசைப் பாடகர்களில் ஒருவரான அமுதன் அண்ணாமலை அவர்கள் எண்பது வயதைக் கடந்தும் கனடா தேசத்தின் மொன்றியால் மாநகரில் வாழ்ந்து வருகின்றார். அத்துடன் மேலும் சில சிறந்த பொப் இசைப் பாடகர்கள் உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து இன்றும் பாடிப் பாடி தங்கள் நாட்களை இனிதாகக் களித்து வருகின்றார்கள். அவர்களில் நித்தி கனகரத்தினம் அவர்கள் Australia விலும் - ஷண் Denmark இலும் M.P. பரமேஸ் Germanyயிலும் . பாடகர் முத்தழகு Topal Ragal, M.J.M. Anzar, விபுலானந்தமூர்த்தி ஆகியோர் இலங்கையிலும் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கும் நாம் எமது வாழ்த்துக்களைத் தெரிவிப்போமாக!***

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் பொலிஸார், போக்குவரத்து பொலிஸ், இராணுவத்திற்கு முன் இடம் பெற்ற இரட்டை கொலை குற்றவாளிகளை கைது செய்ய முடியாது திணறும் பொலிஸார்



(16.01.2025)

மன்னார் நீதவான் நீதி மன்றத்துக்கு முன்பாக 16-01-2024 பட்டப்பகலில் இருவர் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட சம்பவம் மன்னார் மாவட்டத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன் போலீசார் மீதும் சட்டத்தின் மீதும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த இரண்டு வருடங்களில் நடைபெற்ற 2வது துப்பாக்கிச்சூடு சம்பவம் இது என்பதுடன் 4 நபர்கள் குறித்த இரண்டு துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

காலை 8.30 மணிக்கும் 9 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மன்னார் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்றுக்கு வருகை தந்த நான்கு பேர் மீது மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இனம் தெரியாத நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டதுடன் சம்பவ இடத்தில் இருந்து தப்பி சென்றுள்ளார்.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நால்வரில் இருவர் மன்னார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளனர். இந்த நிலையில் பட்டப்பகலில் நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற துப்பாக்கி சூடு சம்பவத்தை தடுக்க முடியாத போலீசார் குற்றவாளிகளை கைது செய்ய முடியாமல் போனமை தொடர்பில் மக்கள் பொலிஸார் மீது அதிருப்தியை வெளிப்படுத்தி வருகின்றனர்.

துப்பாக்கி சூடு இடம் பெற்ற இடத்தில் ஒரு பகுதியில் நீதிமன்ற வளாகமும் அங்கு துப்பாக்கி ஏந்திய பொலிஸார் கடமையில் இருந்த நிலையில் மறு பக்கம் மன்னார் மாவட்ட போக்குவரத்து பொலிஸாரின் அலுவலகம் காணப்பட்ட நிலையில் சம்பவம் இடம் பெற்ற இடத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் இராணுவ முகாம் காணப்பட்ட நிலையில் குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதுடன் சந்தேக நபர்களும் தப்பி சென்றுள்ளமை மன்னார் மாவட்ட பொலிஸார் மற்றும் இராணுவத்தின் பாதுகாப்பு கடமை தொடர்பில் பல்வேறு விமர்சனங்களை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாகவே குறித்த சம்பவத்தில் உயிரிழந்த நபர் மீது கடந்த வருடம் பொலிஸ் சீருடைக்கு ஒத்த சீருடையுடன் வருகை தந்த நபர் ஒருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நிலையில் குறித்த நபர் தெய்வாதீனமாக உயிர் தப்பி இருந்தார்.

அதே நேரம் சம்பவத்தின் பின்னணியில் உள்ள வழக்கு ஒன்றுடன் தொடர்பு பட்ட நபர் ஒருவர் உள்ளடங்களாக அவருடம் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் முன்னதாகவே அடம்பன் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட நிலையில் ஒரு வருடம் கடந்த நிலையில் குறித்த கொலை தொடர்பிலோ கொலை முயற்சி தொடர்பில் பொலிஸார் எந்த வித கைது நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறான நிலையில் நீதிமன்றத்துக்கு முன்பாக இடம்பெற்ற குறித்த கொலை சம்பவம் மன்னார் மக்கள் மத்தியில் அச்சத்தை உருவாக்கியுள்ளதுடன் போலீசார் மீதும் அவர்களின் விசாரணை நடவடிக்கைகள் மீதும் மக்கள் மத்தியில் நம்பிக்கை யீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

முன்னைய துப்பாக்கி சூடு சம்பவங்கள் மற்றும் கொலை சம்பவங்கள் போன்று சம்பவத்தின் பின்னர் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அப்பகுதியில் உள்ள ஊஊவுஏ கெமராக்களையும் சோதித்து வருகின்றனர்.

இருப்பினும் இதுவரை குறித்த துப்பாக்கி பிரயோகம் தொடர்பாக எந்த சந்தேக நபர்களும் கைது செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

---

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** ஆனந்தம் பெருகும். வாகன மாற்றம் உண்டு. வியாபாரம் விருத்தியாகும். பக்கத்து வீட்டு பகை மாறும். புதிய நட்பு உருவாகும். மெத்தனப் போக்கு மாறும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். தந்திரமாக செயல்படுவீர்கள். நண்பர்களால் நன்மை உண்டு. சுயத்தொழில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையகடன் வசூலாகும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். உணவுத்தொழில் உயர்வு பெறும். இனிப்பான செய்திகள் வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரிய வாய்ப்புகள் தேடி வரும். மாற்றங்கள் கிடைக்கும். குடும்ப பாசம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கபாலீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Z




**தனுசு:** ஏற்றங்கள் அதிகரிக்கும் வாரம். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். பூர்வீக சொத்து கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச்செலவு ஏற்படும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். இனிப்பான செய்திகள் வரும். உணவுத்தொழில் உயர்வு பெறும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்புக்கள் உருவாகும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. இனிய தகவல் வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டு பயணம் ஏற்படும். மாற்று இனத்தவர் நட்பு கிட்டும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பழையகடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். தாய்வழி உறவில் சற்று கவனம் தேவை. கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். கௌரவம் உயரும். வறுமைகள் ஒழியும். தன லாபம் கூடும். தகுதிகள் உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். தங்க நகைகள் சேரும். சகோதரியால் அனுகூலம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளிப்பதால் யோக பலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,4,3

அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,S




**மகரம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர்கள் வருகை ஏற்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டாகும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். தாராளமான தனவரவுகள் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை சீராகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பால்ய நண்பரை சந்திக்க நேரிடும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். முன்கோபம் தவிர்க்கவும். எதிரிகளையும் நண்பர்களாக்கி ஏற்றங்கள் காணக்கூடிய எதார்த்தமான காலம். லஷ்மி கடாட்ஷம் உண்டாகும். ஆடை, அணிகலன் சேரும். குதூகலமான மனநிலை காணப்படும். பணத்தட்டுப்பாடு ஏற்பட்டு மறையும். தாய்வழி உறவினர் கவனம் தேவை. தோற்றப்பொலிவு கூடும். உடல்நலத்தில் அக்கறை தேவை. எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆரோக்கியம் அதிகரிக்கும். கணவன், மனைவி கௌரவம் உயரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. கடன் தொல்லை தீரும். கட்டிடத்தொழில் கவனம் தேவை. மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். உயர்கல்வி ஆர்வம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. மங்களச் செய்திகள் வரும். திருப்புமுனைகளை சந்திக்கக்கூடிய காலம். திருமண வாய்ப்பு கூடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சண்முகப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,4,1,9

அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,J




**கும்பம்:** எடுத்த காரியம் வெற்றி பெறும். தொலைநோக்கு சிந்தனையால் விலைமதிக்க முடியாத வெகுமானம் கிடைக்கக் கூடிய அற்புதமான காலம். நிதி நிறுவனம் லாபம் தரும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு. மாணவர் மதிப்பு உயரும். இனிய சம்பவம் அமையும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். குதூகலம் அதிகரிக்கும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. கமிஷன் தொழில் லாபம் தரும். வேண்டாத நட்பு விலகும். விரக்தி நிலை மாறும். முடிவுகள் சாதகமாகும். முயற்சிகள் தாமதமாகும். வாகன யோகம் உண்டு. வகையான செல்வம் சேரும் காலம். நல்லோர்கள் வாழ்த்து கிடைக்கும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். மாலை நேரத்தில் பெண்களுக்கு கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். சந்தோ'மான நிகழ்வுகளும் சாதகமான சூழ்நிலை உள்ள அற்புதமான காலம். இக்கட்டான சூழ்நிலை அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் கூடும். உத்தியோக உவு கிட்டும். பிள்ளைகளால் பெருமை சேரும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். வெற்றி பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பிள்ளைகளால் பெருமை தரும். நல்ல செய்திகள் வரும். ஆறுதலான சூழ்நிலை அமையும். உற்சாகம் களை கட்டும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். கஷ்ட காலம் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்ச பூதம், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**மீனம்:** சாதகமான சூழ்நிலைகள் உருவாகும் வாரம். நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். நீண்ட நாட்களாக நினைத்து வைத்து இருந்த காரியம் இன்று நிறைவேறும். அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். பிள்ளைகளின் உடல்நலனில் அக்கறை தேவை. பெண்களால் பிரச்சனை ஏற்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். மனசஞ்சலம் ஏற்படும். பணவரவு சுமாராக இருக்கும். வேண்டாத விஷயங்களை தவிர்க்கவும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர் வருகை உற்சாகம் கொடுக்கும். புதிய முயற்சிகளில் கவனம் தேவை. சகோதர வழியில் ஒற்றுமை அதிகரிக்கும். விவேகமான செயல்களால் வெற்றி கிட்டும். திருமண தடைகள் விலகும். கணவன், மனைவி உறவு வலுப்படும். சிறப்போடும், பொறுப்போடும் செயல்படுவீர். திருப்பு முனைகளை சந்திக்கும் காலமாக அமையும். அயல்நாட்டுப் பிரயாணம் கூடி வரும். உறவினர் பகை மாறும். வேலைவாய்ப்பு கிட்டும். எதிர்ப்புக்கள் விலகும். உயர்ந்த நிலை அடைவீர். பொருளாதார நிலை சீராக இருக்கும். கோபம் தவிர்த்து ஆன்மீகத்தில் ஆர்வம் செலுத்த வேண்டும். புதிய நிலம், வீடு வாங்க நேரிடும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அமையும். எதிர்ப்புக்கள் குறையும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். ஆரோக்கியத்தில் அக்கறை வேண்டும். விளையாட்டுத் துறையில் வெற்றிக் கிட்டும். காதலர்கள் தம்பதியாவார்கள். செல்வாக்கு மேம்படும். தர்ம சிந்தனை மேலோங்கும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,2,1

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS



RESIDENTIAL | INDUSTRIAL | VACANT LAND | CONSTRUCTION | COMMERCIAL



### OUR SERVICE

**RESIDENTIAL, COMMERCIAL**

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

**CONTACT US**

# NESAN
## Subramaniam

# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank | First National Financial LP | TD Canada Trust | Manulife | National Bank | Desjardins | RFA | MCAP | Home Trust | Equitable Bank | radius financial | RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் துணை
மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1502 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 17, 2025



# கனடாவில் வானொலி ஒலிபரப்புத் தளத்தில் தொடர்ச்சியாக தனி – யொருவராக 30 மணி நேரம், நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய "யுகம்" வானொலி சதீஸ் நடராஜா

*- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம் -*

கனடாவில் வானொலி ஒலிபரப்புத்துறையில் புகுந்து. தொடர்ச்சியாக அந்தத் துறையில் தக்கவைத்துக் கொண்டு தங்கள் பயணத்தைத் தொடரும் நூற்றுக்கணக்கானவர்களை நாம் நன்கு அறிவோம். அவர்களோடு நட்பு கொண்டாடி வருகின்றோம்.
அந்த வகையில் நமக்கு கிடைத்த தகவல்களின்படி. கனடிய வானொலி ஒலிபரப்புத்துறையில் முதற் தடவையாக தொடர்ச்சியாக 30 மணித்தியாலங்கள் வானொலி கலையகம் ஒன்றில் தனியொருவராக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய "யுகம்" வானொலி அறிவிப்பாளர் சதீஸ் நடராஜாவின் "வானலைச் சாதனை" பற்றிய விபரங்களை உலகத் தமிழர்களிடத்தில் கொண்டு சென்று சேர்க்கும் நோக்கம் கொண்டதுதான் இந்தக் கட்டுரை.
(தொடர்ச்சி 20ம் பக்கம்)

# ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகிய ஈழத்து "பொப்" இசைப் பாடல்களுக்கு உயிர் கொடுத்து வரும் கனடா வாழ் ஈழத்துக் கலைஞர் பாபு ஜெயகாந்தன்



*- ஸ்காபுறோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம் -*

இலங்கையில் இனிதான "பொப்" இசைப் பாடல்களை இயற்றியும் இசையமைத்தும் பாடியும் எம்மையெல்லாம் மகிழ்வித்த கலைஞர்களில் பலர் இன்று எம்மோடு இல்லை. காலம் அவர்களைக் காவிச் சென்றாலும் அவர்கள் உருவாக்கிய பாடல்கள் மாத்திரம் "சாகா வரம் பெற்றவையாக" இன்னும் எம்மை மகிழ்விக்கின்றன.
இவ்வாறு சாகா வரம் பெற்ற ஈழத்துப் "பொப்" இசைப் பாடல்கள் பலவற்றை தேடித் தேடிப் பெற்று, எம் காதுகளுக்கும் எம் உள்ளங்களுக்கும் கொண்டு வந்து சேர்க்கும் அரிய இசைப் பணியை கனடாவில் ஆற்றிக் கொண்டிருக்கும் எம் மத்தியில் இன்றும் பயணிக்கும் இசைக் கலைஞர் பாபு ஜெயகாந்தன் அவர்களை அறிமுகம் செய்து வைத்து பாராட்டும் நோக்கோடு இந்த கட்டுரை வடிக்கப் பெறுகின்றது
(தொடர்ச்சி 25ம் பக்கம்)

# மார்க்கம் Boxgrove Seniors Community Wellness Club மூத்தோர்களுக்கான அமைப்பு நடத்திய "தைப் பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள்" விழா – 2025








நீண்ட காலமாக மார்க்கம் நகரில் இயங்கிவரும் மூத்தோர்களுக்காக ஆரம்பிக்கப்பெற்று சிறப்பாக இயங்கிவரும் **Boxgrove Seniors Community Wellness Club** அமைப்பு நடத்திய 2025ம் ஆண்டிற்கான "தைப் பொங்கல் மற்றும் தமிழ் மரபுத் திங்கள்" விழா 15-01-2025 அன்று புதன்கிழமை மார்க்கம் நகரில் உள்ள சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.
விழாவிற்கு அமைப்பின் தலைவி திருமதி சுந்தரேஸ்வரி யோகராஜா தலைமை தாங்கினார்.
சிறப்பு விருந்தினர்களாக மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அவர்களும் மார்க்கம் நகரசபை உறுப்பினர் யுனிற்றா நாதன் அவர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.
நிகழ்ச்சிகளை தென்புலோலியூர் கிருஸ்ணலிங்கம் தொகுத்து வழங்கினார்.
கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்று சபையோரை மகிழ்வித்தன.
பொன்னையா விவேகானந்தன் அவர்கள் "தமிழ் மரபுத் திங்கள்" பற்றிய சிறப்புரையாற்றினார்.
அன்றைய விழா ஒரு முழுமையானதும் எமது பண்பாட்டின் அடையாளமாகவும் நடத்தப்பெற்றது என்றால் மிகையாகாது.

# Senior Member of our National Ethnic Press & Media Council of Canada, John Saraidaris passes away last week.

A Senior Member of our National Ethnic Press & Media Council of Canada, and the younger brother of the our President Thomas Saras, John Saraidaris passes away last week, due to heath issues.
He had been very friendly and touchable to all other members of our National Ethnic Press & Media Council of Canada, who represent hundreds of different Languages. Many members and family members paid their tribute to late John Saraidaris, during the prayer, which took place on 10-01-2025.





தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker